# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2008
# Annual Performance Report

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2008

## கல்வி அமைச்சு

இவ் வருடாந்த அறிக்கை அரச நிதி சுற்றறிக்கை இல. 402 இன் 2 1.4 வாசகத்துக்கு அமைய கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டது.

2009 ஜுன்

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

## கல்வி அமைச்சு
## வருடாந்த அறிக்கை - 2008

அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இன் 2.1.4 வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைய 2008 ஆம் ஆண்டுக்கான இவ்வமைச்சின் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதுடன் அரச பொதுக் கல்விச் செயற்பாடுகள் மற்றும் அதனுடன் இணைந்த முழுமையான சுருக்கம் இத்துடன் சமர்ப்பிக்கப்படுவதாக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

கல்விக்கான புதிய நீடித்த நிரந்தரக் கொள்கைகளை வகுக்கவும், அதனூடாகப் பொதுக் கல்வியின் எதிர்காலப் பயணத்தின் உயர்ந்தபட்ச வினைத்திறன் மற்றும் பயன்மிக்கதாக முன்னெடுப்பதனைப் பிரதான தேவையாக இனங்கண்டு அதற்காகத் தொடர்ந்தும் செயற்படுவது அத்தியாவசியமாகும்.

கல்வி நேரடியாக நாட்டின் பொருளாதார சுபீட்சத்தினைப் போன்று இளம் சந்ததியினரின் ஆன்மீக விருத்தியினை உறுதி செய்து அவர்களது இயலுமைகள் உள்நாட்டினைப் போன்று சர்வதேச சவால்களை வெற்றிகொள்ளத் தேவையான வசதிகளை வழங்குவது கல்வி அமைச்சின் விசேட நோக்கம் என்பதனைத் தயவாய்க் குறிப்பிடுகின்றேன்.

இலவசக் கல்வியின் தேவையைத் தொடர்ந்தும் பாதுகாத்து பண்புசார் தரத்தினை மேம்படுத்தி கல்வியின் தேவைகள் தொடர்பாக சகல பிள்ளைகளினதும் உரிமையினைப் பாதுகாத்தல் மற்றும் விருத்தி செய்வது கல்வி அமைச்சின் முதன்மைப் பணியெனக் கருத்திற் கொண்டுள்ளதாக விசேடமாகக் குறிப்பிடல் வேண்டும்.

**செயலாளர்**
**கல்வி அமைச்சு.**

# உள்ளடக்கம்


**அத்தியாயம் 1 : கல்வி அமைச்சு தொடர்பான சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1.1. | கல்வி அமைச்சின் செயற்பாட்டுப் பணிகள் | 1 |
| 1.2. | கல்வி அமைச்சின் அடிப்படை ஒழுங்கமைப்புக் கட்டமைப்புக்கள் | 1 |
| 1.3. | கல்வி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்கள் | 2 |
| 1.4. | பாடசாலை முறைமை | 2 |
| 1.5. | பாடசாலை முறைமையின் | 4 |

**அத்தியாயம் 2 : கல்விப் பிரவேசம் மற்றும் பங்கேற்பினை அதிகரித்தல்**

| | | |
|---|---|---|
| 2.1. | பாடசாலைப் பாடநூல் வழங்கல் | 7 |
| 2.2. | பாடசாலைச் சீருடை வழங்கல் | 9 |
| 2.3. | புலமைப்பரிசில் மற்றும் புலமைப்பரிசில் உதவி | 9 |
| 2.4. | பாடசாலை சுகாதாரம் மற்றும் போசாக்கு | 9 |
| 2.5. | முறைசாராக் கல்வி | 11 |
| 2.6. | விசேட கல்வி | 11 |
| 2.7. | சகலருக்கும் கல்வி | 12 |

**அத்தியாயம் 3 : கல்வியின் பண்புசார் விருத்தி**

| | | |
|---|---|---|
| 3.1. | ஆரம்பக் கல்வி | 13 |
| 3.2. | விஞ்ஞானக் கல்வி | 14 |
| 3.3. | தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம் | 14 |
| 3.4. | ஆங்கில மொழி | 15 |
| 3.5. | இரட்டை மொழிக் கல்வி | 15 |
| 3.6. | சமய மற்றும் விழுமியக் கல்வி | 16 |
| 3.7. | சிங்கள மொழி | 16 |
| 3.8. | தமிழ் மொழி | 16 |
| 3.9. | அழகியற் கல்வி | 16 |
| 3.10. | விளையாட்டு மற்றும் உடற்கல்வி | 17 |
| 3.11. | தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி | 17 |
| 3.12. | முஸ்லிம் பாடசாலை அபிவிருத்தி | 18 |
| 3.13. | கல்வியின் பண்புசர் விருத்தியினை உறுதிசெய்தல் | 18 |
| 3.14. | கல்வி அடைவுமட்டம் தொடர்பான முன்னேற்றங்கள் | 18 |

**அத்தியாயம் 4 : மனிதவள வழங்கல் மற்றும் அபிவிருத்தி**

| | | |
|---|---|---|
| 4.1. | ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல் | 23 |
| 4.2. | தேசிய கல்விக் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய கல்லூரிகளில் மேற்கொள்ளப்படும் நிறுவன ஆசிரியர் பயிற்சிகள் | 24 |

4.2.1. ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ளல் 24

4.2.2. தேசிய கல்விக் கல்லூரிகள் மேற்கொள்ளப்படும் நிறுவன ரீதியான பயிற்சி மற்றும் ஏனைய வேலைத்திட்டங்கள் 25

4.3. ஏனைய பயிற்சிகள் - உள்நாடு 25

4.4. ஏனைய பயிற்சிகள் - வெளிநாடு 25

4.5. புதிய கல்விக் கல்லூரி ஆரம்பித்தல் 26

4.6. கல்வி முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ விருத்தி 26

**அத்தியாயம் 5 : பௌதீக வசதிகளை வழங்கல்**

5.1. கட்டிட நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு 27

5.2. கற்றல் - கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல் 29

**அத்தியாயம் 6 : கல்விச் செலவினம்**

6.1. மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் 31

6.2. கல்விக்கான வெளிநாட்டு உதவி முதலீடுகள் 32

6.2.1 உலக வங்கி உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள 33

6.2.2. ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி பெறும் அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் பணிகள் 34


.

## அட்டவணைகள் மற்றும் வரைபடங்கள்


அட்டவணை 1.4.1. : மாகாணங்களுக்கு அமைய பாடசாலைகளின் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் எண்ணிக்கை - 2008 2

அட்டவணை 1.4.2 : பாடசாலைகளின் எண்ணிக்கை அவ்வவ் பாடசாலை வகைகளுக்கு அமைய 3

அட்டவணை 1.4.3. : கற்பித்தல் மொழிக்கமைய பாடசாலைகளின் எண்ணிக்கை 3

அட்டவணை 1.4.4. : மாகாணங்களுக்கமைய பிரிவெனா எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை 3

அட்டவணை 1.4.5. : தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை 4

அட்டவணை 1.5.1 : மாணவர் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைந்த மற்றும் 2500 ஐ விட மேற்பட்ட எண்ணிக்கை மற்றும் விகிதாசாரம் 2003 - 2008 4

அட்டவணை 1.5.2 : மாணவர் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைந்த பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் எண்ணிக்கை விகிதாசாரம் 5

அட்டவணை 1.5.3 : முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அமைய பாடசாலைகளின் எண்ணிக்கை 2008 5

அட்டவணை 3.14.1. : மொழிகளுக்கு அமைய 5ம் தரப் புலமைப்பரிசில் பெறுபேறுகள் - 2008 19

**வரைபு 3.14.1.** : 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை - 2008, 70

| | | |
|---|---|---|
| | புள்ளிகளை விடக் கூடுதலாகப் பெற்ற மாணவர் விகிதாசாரம் | 19 |
| அட்டவணை 3.14.2. : | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை 2006 - 2008 | 19 |
| | **வரைபு 3.14.2.** :க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை 2006 - 2008 | 19 |
| அட்டவணை 3.14.3. : | க.பொ.த. (சா.த.) பரீட்சை - 2008 பிரதான பாடங்களுக்கமைய சித்தியடைந்த மாணவர் விகிதாசாரம் | |
| | **வரைபு 3.14.3.** :க.பொ.த. (சா.த.) பரீட்சை - 2008 | 20 |
| | பிரதான பாடங்களுக்கமைய சித்தியடைந்த மாணவர் விகிதாசாரம் | 20 |
| அட்டவணை 3.14.4. : | க.பொ.த. (சா.த.) பரீட்சை - 2008 பிரதான பாடங்களுக்கமைய பரீட்சைக்குத் தோற்றிய மற்றும் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை | 20 |
| | **வரைபு 3.14.4.** :க.பொ.த. (சா.த.) பரீட்சை - 2008 பிரதான பாடங்களுக்கமைய பரீட்சைக்குத் தோற்றிய மற்றும் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை | 21 |
| அட்டவணை 3.14.5. : | க.பொ.த. (உ.த.) பரீட்சைபாடவிதானத்துக்கு அமைய பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காகத் தகைமைபெற்ற மாணவர் எண்ணிக்கை - 2008 | 21 |
| | **வரைபு 3.14.5.** :க.பொ.த. (உ.த.) பரீட்சை பாடவிதானத்துக்கு அமைய பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காகத் தகைமைபெற்ற மாணவர் எண்ணிக்கை - 2008 | 21 |
| அட்டவணை 3.14.6. : | க.பொ.த. (உ.த.) பரீட்சை பாடவிதானத்துக்கு அமைய பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காகத் தகைமைபெற்ற மாணவர் விகிதாசாரம் 2005 - 2008 | 22 |
| | **வரைபு 3.14.6.** :க.பொ.த. (உ.த.) பரீட்சை பாடவிதானத்துக்கு அமைய பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காகத் தகைமைபெற்ற மாணவர் விகிதாசாரம் 2005 - 2008 | 22 |
| அட்டவணை 4.1.1. : | ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல் (2005 - 2008) | 23 |
| | **வரைபு 4.1.1.** :அரச பாடசாலைகளில் ஆசிரியர் விருத்தி 2005 - 2008 | 23 |
| அட்டவணை 4.1.2. : | மாவட்டங்களுக்கமைய மொத்த மாணவர் ஆசிரியர் விகிதாசாரம் | 24 |
| அட்டவணை 4.6.1. : | உத்தியோகத்தர்களுக்காக உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் | 26 |
| அட்டவணை 6.1.1. : | மொத்த ஒதுக்கீடு மற்றும் உண்மையான செலவினம் (மீண்டெழும்) - 2008 | 31 |

| | | | |
|---|---|---|---|
| அட்டவணை 6.1.2 | : | ஒதுக்கீடு மற்றும் உண்மையான செலவினம் (மூலதனம்) - 2008 | 31 |
| அட்டவணை 6.1.3. | : | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் சுருக்கம் - 2008 | 32 |

# அத்தியாயம் 1 : கல்வி அமைச்சு தொடர்பான சுருக்கம்

***நோக்கு***

*இலங்கையின் அடையாளத்தின் பங்களார்களாக திறமை வாய்ந்த பிரஜைகள் ஊடாக சர்வதேச சமூகத்தின் அதிசிறந்த நிலையை எட்டுதல்.*

***பணிக்கூற்று***

*பங்காளர் தரப்பினை திருப்திப்படுத்தக் கூடியவாறான வினைத்திறன் மற்றும் உயர் பண்பசார் தரத்தின் ஊடாக கல்வியின் நவீன மயப்படுத்தப்பட்ட மற்றும் நவீன பிரவேசங்கள் ஊடாக சர்வதேச தரங்களுக்கு அமைவாக திறமை வாய்ந்த பிரஜைகளை உருவாக்குதல்.*

## 1.1 கல்வி அமைச்சின் செயற்பாட்டுப் பணிகள்

- தேசிய நோக்கு, அபிலாசைகள் மற்றும் கொள்கைகளுக்கு அமைவாக கல்வியின் அபிவிருத்திப் பணிகளைத் திட்டமிடல், அமுல்படுத்தல், மதிப்பீடுகள், முன்னேற்ற மீளாய்வுகள் மற்றும் மேற்பார்வைகள்.

- கல்வி அபிவிருத்திக்காக தர நிர்ணயம் மற்றும் அத்தரங்களைப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்காக பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களின் ஆக்கத்திறன் மிக்க வேலைத்திட்டங்களை ஊக்குவித்தல்.

- கல்வி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் நிர்வாக முகாமைத்துவப் பணிகளை விரிவாகப் பேணுவதற்கு மாகாணப் பொறுப்பாளர்களுடன் சிறந்த இணைப்பை ஏற்படுத்தல்.


- உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவிகளுடன் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் மேற்பார்வை.

- கற்றல் உபகரணங்கள், பாடசாலைக் கட்டிடம் மற்றும் தளபாடங்களுக்கான அளவு மற்றும் தரங்களை வகுத்தல்.

- சகல மாணவர்களுக்கும் பாடசாலைச் சீருடைகளை வழங்குதல் மற்றும் குறைந்த வருமானம் பெறும் திறமைமிக்க மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்.

## 1.2 கல்வி அமைச்சின் அடிப்படை ஒழுங்கமைப்புக் கட்டமைப்புக்கள்

கல்வி அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் அஞ்சு மேலதிக செயலாளர்களின் கீழ் பிரதானமாக நான்கு பிரிவுகள் அமைச்சின் நிர்வாகக் கட்டமைப்பில் அடங்குகின்றன. பிரதம கணக்காளரின் கீழ் நிதி முகாமைத்துவக் கட்டமைப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், கல்விப் பணிப்பாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள் மற்றும் அவ்வவ் கிளைகள் மற்றும் உப பிரிவுகள் அமுல்படுத்தப்படுகின்றன.




## 1.3 கல்வி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்கள்

- மாகாணக் கல்வித் திணைக்களம்
- கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
- இலங்கை பரீட்சைத் திணைக்களம்
- தேசிய கல்வி நிறுவகம்
- தேசிய நூலக மற்றும் சுவடிக் கூடச் சேவைச் சபை
- இலங்கை தேசிய நூலக அபிவிருத்திச் சபை
- இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுச் சபை

## 1.4 பாடசாலை முறைமை

மாணவர்களுக்கு கல்வியினை வழங்குவதற்காக நாடெங்கும் விரிவடைந்துள்ள கிளை வலையமைப்புக்கள் உள்ளன. அரச பாடசாலைகள், பிரிவெனாக்கள், கட்டணம் அறவிடுவதனைப் போன்று, அறவிடப்படாத பாடசாலைகள் மற்றும் விசேட பாடசாலைகள் இவற்றில் பிரதானமானதாகும். அரச பாடசாலைகள் மாகாணங்களுக்கு அமைய விரிவடைந்துள்ள முறைகள் மற்றும் அப்பாடசாலைகளில் உள்ள ஆசிரிய மாணவ எண்ணிக்கைகள் அட்டவணை 1.4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.4.1. : மாகாணங்களுக்கு அமைய பாடசாலைகளின் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் எண்ணிக்கை - 2008**

| மாகாணம் | பாடசாலைகளின் | மாணவர்களின் | ஆசிரியர்களின் |
|---|---|---|---|
| மேற்கு | 1340 | 896,497 | 41,237 |
| மத்தி | 1458 | 517,070 | 31,424 |
| தெற்கு | 1094 | 505,860 | 29,538 |
| கிழக்கு | 969 | 378,185 | 17,528 |
| ஊவா | 832 | 280,054 | 17,316 |
| சப்ரகமுவ | 1099 | 365,760 | 21,833 |
| வடக்கு | 877 | 261,477 | 12,204 |
| வடமேல் | 1218 | 468,242 | 26,952 |
| வடமத்தி | 774 | 252,157 | 14,084 |
| **இலங்கை** | 9661 | 3,925,302 | 212,116 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2008*

அரச பாடசாலைகள் 1AB, 1C, வகை 2,வகை 3 என வகைப்படுத்தப்பட்டுள்ளன. 1AB பாடசாலைகளில் சகல பாடவிதானங்களும் உயர்தர வகுப்பு வரை கற்பிக்கப்படுவதுடன்,1Cபாடசாலைகளில் உயர்தரம் வரை வகுப்புக்கள் இருந்த போதிலும் விஞ்ஞானம் மற்றும் கணிதப் பாடவிதானங்கள் இல்லை. வகை 2 பாடசாலைகளில் க.பொ.த. (சா.த.) வரை வகுப்புக்கள் நடைபெறுவதுடன், வகை 3 இன் பாடசாலைகளில் இருப்பது ஆரம்பம் (1 - 5 தரம்) எனக் காணப்படுகின்றன. அட்டவணை 1.4.2இல் இவ்வகைகளின் பாடசாலை எண்ணிக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.4.2 :பாடசாலைகளின் எண்ணிக்கை அவ்வவ் பாடசாலை வகைகளுக்கு அமைய**

| வகை | 1AB | 1C | வகை 2 | வகை 3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பாடசாலை எண்ணிக்கை | 698 | 1,933 | 4,158 | 2,872 | 9,661 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2008*

கற்பித்தல் மொழிக்கு அமையவும், பாடசாலைகளின் எண்ணிக்கையை வேறுபடுத்தி இனங்காண வேண்டும். பிரதானமாகக் கற்பித்தல் மொழி சிங்களம் அல்லது தமிழாக இருப்பதுடன் பல பாடசாலைகளில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இரட்டை மொழிக் கொள்கையின் கீழ் ஒருசில பாடசாலைகளில் பாடங்கள் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுகின்றன. இந்நிலை 1.4.3 அட்டவணையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.4.3.:கற்பித்தல் மொழிக்கமைய பாடசாலைகளின் எண்ணிக்கை**

| மொழி | சிங்களம் | தமிழ் | சிங்களம் மற்றும் தமிழ் | சிங்களம் மற்றும் ஆங்கிலம் | தமிழ் மற்றும் ஆங்கிலம் | சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலை எண்ணிக் | 6,367 | 2,786 | 50 | 314 | 111 | 33 | 9,661 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2008*

இலங்கையின் பிரிவெனாக்கல்வி தொடர்பாக நீண்ட வரலாறுகள் காணப்படுகின்றன. சகல மாகாணங்களிலும் பிரிவெனாக்கள் நடாத்தப்படுவதுடன் மாகாணங்களுக்கு அமைய பிரிவெனாக்களின் பரம்பல் மற்றும் அவற்றில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை அட்டவணை 1.4.4. இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.4.4.: மாகாணங்களுக்கமைய பிரிவெனா எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை**

| மாகாணம் | பிரிவெனாக்களின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மேற்கு | 143 | 12653 | 1249 |
| மத்தி | 101 | 7486 | 774 |
| தெற்கு | 154 | 10751 | 1319 |
| வடக்கு | 1 | 276 | 0 |
| கிழக்கு | 23 | 1191 | 102 |
| வடமேல் | 88 | 7908 | 810 |
| வடமத்தி | 54 | 4192 | 383 |
| ஊவா | 52 | 4263 | 459 |
| சப்ரகமுவ | 75 | 7345 | 648 |
| **இலங்கை** | 691 | 56065 | 5744 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2008*

பாடசாலைகளை அரசினால் பொறுப்பேற்கும் போது ஒரு சில பாடசாலைகளுக்கு அரசினால் எதுவித உதவியும் இன்றி கட்டணம் அறவிடப்படும் தனியார் பாடசாலையாக நடாத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு சில பாடசாலைகளில் ஆசிரிய சம்பளம் மாத்திரம் அரசினால் பெற்று கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலைகளாகக் காணப்படுகின்றன. இது தொடர்பான விபரங்கள் அட்டவணை 1.4.5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.4.5.:தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை, ஆசிரியர் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கை**

| மாகாணம் | விசேட பாடசாலைகள் உட்பட தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை | | | மாணவர் எண்ணிக்கை | மொத்த ஆசிரியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | கட்டணம் அறவிடப்படும் | கட்டணம் அறவிடப்படாத | மொத்தம் | | |
| மேற்கு | 23 | 30 | 53 | 87,039 | 3,974 |
| மத்தி | 6 | 5 | 11 | 11,053 | 592 |
| தெற்கு | 1 | 10 | 11 | 5,132 | 283 |
| வடக்கு | 2 | 4 | 6 | 8,055 | 343 |
| கிழக்கு | 0 | 1 | 1 | 36 | 7 |
| வடமேல் | 0 | 2 | 2 | 915 | 84 |
| வடமத்தி | 1 | 2 | 3 | 213 | 40 |
| ஊவா | 3 | 2 | 5 | 2,414 | 169 |
| சப்ரகமுவ | 0 | 2 | 2 | 237 | 27 |
| **இலங்கை** | **36** | **58** | **94** | **115,058** | **5,519** |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2008*

## 1.5 பாடசாலை முறைமையின் முனைவாக்கம்

சிறிய பாடசாலைகள் தொடர்ந்தும் சிறியதாகுதல் மற்றும் பாரிய பாடசாலைகள் தொடர்ந்தும் விருத்தியடையும் நிலை 2008 ஆம் ஆண்டிலும் காணப்பட்டது. மாணவர் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைந்த 1437 பாடசாலைகள் 2003 ஆம் ஆண்டில் காணப்பட்டதுடன் 2008 ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை 1520 ஆக அதிகரித்துள்ளது. 50 மாணவர்களை விடக் குறைந்த பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை வழங்கும் போது ஆசிரிய மாணவர் எண்ணிக்கையினை 6% மாகப் பேணவேண்டி ஏற்பட்டது. முதலாம் தரத்துக்காக ஒரு பிள்ளையேனும் சேராத 306 பாடசாலைகள் 2008 ஆம் ஆண்டில் காணப்பட்டது. இந்நிலைமை 1.5.1., 1.5.2 மற்றும் 1.5.3 அட்டவணைகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

**அட்டவணை 1.5.1 : மாணவர் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைந்த மற்றும் 2500 ஐ விட மேற்பட்ட எண்ணிக்கை மற்றும் விகிதாசாரம் 2003 - 2008**

| | 2003 | | 2007 | | 2008 | |
|---|---|---|---|---|---|---|
| | பாடசாலை எண்ணிக்கை | விகிதாசாரம் | பாடசாலை எண்ணிக்கை | விகிதாசாரம் | பாடசாலை எண்ணிக்கை | விகிதாசாரம் |
| மாணவர் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைந்த | 1437 | 14.7 | 1533 | 15.8 | 1520 | 15.73 |
| மாணவர் எண்ணிக்கை 2500 ஐ விட மேற்பட்ட | 141 | 1.4 | 167 | 1.7 | 163 | 1.69 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2008*

**அட்டவணை 1.5.2 : மாணவர் எண்ணிக்கை 50 ஐ விடக் குறைந்த பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர் எண்ணிக்கை மற்றும் ஆசிரியர் எண்ணிக்கை விகிதாசாரம்**

| பாடசாலைகளின் எண்ணிக்கை | மொத்த மாணவர் எண்ணிக்கை | மொத்த ஆசிரியர் எண்ணிக்கை | மொத்த பாடசாலை எண்ணிக்கை விகிதாசாரமாக | இப்பாடசாலைகளின் ஆசிரிய மாணவர் விகிதாசாரம் | மொத்தப் பாடசாலைகளின் ஆசிரிய மாணவர் விகிதாசாரம் |
|---|---|---|---|---|---|
| 1520 | 42910 | 7328 | 15.73 | 6:1 | 18:1 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2008*

**அட்டவணை 1.5.3 : முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அமைய பாடசாலைகளின் எண்ணிக்கை 2008**

| முதலாம் தரத்தின் மாணவர் எண்ணிக்கை | பாடசாலைகளின் எண்ணிக்கை | விகிதாசாரமாக |
|---|---|---|
| **0** | 306 | 3.17 |
| **1-9** | 2273 | 23.53 |
| **10-40** | 4488 | 46.45 |
| **41-200** | 2141 | 22.16 |
| **200 ஐவிட மேற்பட்ட** | 152 | 1.57 |

*மூலம் : வருடாந்தப் பாடசாலைப் புள்ளிவிபரம் - 2008*

# அத்தியாயம் 2 : கல்விப் பிரவேசம் மற்றும் பங்கேற்பினை அதிகரித்தல்

2008 ஆம் ஆண்டில் பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் மற்றும் நிலைத்து நிற்பதற்காக பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. 6 - 14 வயதுக்கிடைப்பட்ட மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்காக கட்டாயக் கல்விக் கொள்கையை அமுல்படுத்துவதற்கு மேலதிகமாக மேலும் பல செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன. இலவசமாகப் பாடசாலைப் பாடநூல்களை வழங்குதல் மற்றும் பாடசாலைச் சீருடைத் துணிகளை வழங்குதல், மாணவர் புலமைப்பரிசில்களை வழங்குதல், பாடசாலை மதிய உணவு வழங்குதலைப் போன்று சுகாதார ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களும் இச்செயற்பாடுகளுக்கு இடையே மிக முக்கியத்துவம் ஆகும். முறையாக பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ள முடியாத மாணவர்களுக்காக முறைசாராக் கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் பல்வேறுபட்ட செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டதுடன் விசேட தேவைகள் கொண்ட மாணவர்களுக்காக விசேட கல்வி வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

## 2.1. பாடசாலைப் பாடநூல் வழங்கல்

1980 ஆம் ஆண்டில் பாடநூல்களை இலவசமாக வழங்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்கு அமைய அரச பாடசாலைகள் மற்றும் அரச உதவிபெறும் பாடசாலைகள் 1 - 2 வரையான தரங்களில் கல்வி பயிலும் மொத்த மாணவர் பரம்பரையினருக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் உரியவாறு பாடநூல்களை வழங்கும் செயற்பாடுகள் 2008 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன. அத்துடன் 3 - 11 வரையான தரங்களின் மாணவர்களுக்கு ஆங்கில மொழி கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படுவதற்காக பாடநூல்கள் மற்றும் செயல்நூல்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டுக்காக 2008 ஆம் ஆண்டில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்ட பாடநூல்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக்கமைய விநியோகிக்கப்பட்டுள்ள முறை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணை மூலம் விளக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு : 2008 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டுக்குரிய பாடசாலைப் பாடநூல்கள் மொழிக்கமைய.**

| தொ. இல. | மொழி | புத்தக வகைகளின் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட புத்தகங்கள் |
|---|---|---|---|
| 1. | சிங்கள மொழிமூல புத்தகம் | 131 | 1,385,2160 |
| 2. | தமிழ் மொழிமூல புத்தகம் | 128 | 6,269,370 |
| 3. | ஆங்கில மொழிமூல புத்தகம் | 38 | 350,583 |
| 4. | ஆங்கில மொழிப் புத்தகம் | 20 | 5,781,163 |
| 5. | பிரிவெனா - சிங்கள மொழிமூல புத்தகம் | 31 | 108,571 |
| 6. | பிரிவெனா - ஆங்கில மொழிமூல புத்தகம் | 04 | 18,527 |
| | **மொத்தம்** | **352** | **26,380,374** |

இதற்கு மேலதிகமாக க.பொ.த. (உ.த.) பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெறும் சகல பாடசாலை மாணவர்களுக்கும் General English for G.C.E. Advance Level Classes என்ற பெயரில் ஆங்கில மொழிப் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படுவதுடன் அதற்குரிய ஆசிரிய கையேடு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

பாடசாலைப் பாடநூல் ஆக்கத்தின் போது தேசிய கல்வி நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட பாடவிதானம் மற்றும் பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் அதன் மூலம் பொதுத் தேசிய கொள்கை மற்றும் பொதுத் தேர்ச்சி முறைமையின் அடிப்படையில் பாடநூல்களை ஆக்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

**புதிய பிரவேசங்கள்**

2008 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னர் புத்தாண்டுக்குரிய தேவையான பாடநூல்களை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கும் வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக்குவதற்காக 2008 ஆம் ஆண்டில் பாடநூல் வேலைத்திட்டங்களின் புதிய பிரிவுகள் இணைக்கப்பட்டன. நாடு பூராகவும் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளுக்கு மாணவர் எண்ணிக்கை 2000 ஐ விடக் கூடுதலான மாகாணப் பாடசாலைகளுக்கு அரச அனுசரணையில் இலவசப் பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளும் மாணவர் எண்ணிக்கை 2000 ஐ விட மேற்பட்ட தனியார் பாடசாலைகளுக்கு கொழும்பு மாவட்டத்தில் மற்றும் நுகேகொடை வலயத்தின் சகல பாடசாலைகளுக்கும் நேரடியாக பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக சப்ரகமுவ மாகாணத்தில் இனங்காணப்பட்ட விநியோக மத்திய நிலைய வலையமைப்புக்காக மாகாணப் பாடசாலைகளுக்கு புத்தகங்களை விநியோகிக்கும் மேற்பார்வைச் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இம்முறை அநேகமாக வெற்றியளித்துள்ளதுடன் இதனால் கோட்டக் கல்வி அலுவலகங்களின் பணிகளும் குறைவடைந்துள்ளன.

**பாடநூல்களின் மீளப் பயன்பாடு**

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடநூல்களை ஆண்டின் இறுதியில் மீளப் பயன்படுத்துவதற்காக பாடசாலைகளுக்கு கையளிக்க வேண்டும். பாடநூல்களின் ஆயுட்காலத்தை மூன்று ஆண்டுகள் வரை அதிகரிக்கும் நோக்குடன் பாடநூல்களின் பண்புசார் தரங்கள் விருத்தி செய்யப்பட்டன. இது யதார்த்த பூர்வமான நடவடிக்கையாக இருந்த போதிலும் இதன் மூலம் எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்கவில்லை. பொதுவாக நோக்குமிடத்து வருடாந்தம் 80% ஐ விட அண்மித்த பாடநூல்களின் அளவு மீள அச்சிடவேண்டி ஏற்படுவதாக பாடசாலைகள் மற்றும் கோட்டக் கல்வி அலுவலகங்களினால் கிடைக்கப்பெறும் தகவல்களுக்கு அமையத் தீர்மானிக்க முடிந்துள்ளது.
2008 ஆம் ஆண்டில் பாடநூல் மீளப் பயன்பாடு தொடர்பாக பல செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன.

**சிறந்த முறையில் பாடநூல்களை பயன்படுத்துவதற்காக சான்றிதழ்களை வழங்குதல்**

பாடநூல்களை மீளப் பயன்படுத்துவது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் இல. 1/33 மற்றும் 2008/23 கொண்ட சுற்றறிக்கையின் V ஆம் வாசகத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டவாறு 2008 ஆம் ஆண்டில் சகல வகுப்புக்களுக்கும் மிகச் சிறந்த முறையில் பாடநூல்களைப் பயன்படுத்தியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட மூன்று மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களை வழங்கும் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
சான்றிதழ்களை வழங்கும் தினமாக நாடெங்கும் பாடசாலைப் பாடநூல்களை விநியோகிக்கும் தினமான 2008 டிசம்பர் 04 ஆம் திகதியெனத் தீர்மானிக்கப்பட்டது.
இவ்வேலைத்திட்டங்கள் மூலம் 2009 ஆம் ஆண்டில் பாடநூல்கள் வீணாகுவதனை அநேகமாக வரையறுப்பதற்கும் மீள் பயன்பாட்டினை 23% வரை விருத்தி செய்வதற்கும் முடிந்துள்ளது.

**இணையத்தளம் ஊடாகப் பாடநூல்கள்**

2009 ஆம் ஆண்டுக்காக புதிதாக ஆக்கப்பட்ட 8 ஆம் தரத்தின் பாடநூல்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் இணையத்தளம் ஊடாக வெளியிடப்பட்டுள்ள பாடநூல் வகைகளின் எண்ணிக்கை 41 ஆகும்.

**இணையத்தள முகவரி** [www.edupub.gov.lk](http://www.edupub.gov.lk)

பாடநூல்கள்CD இறுவெட்டுக்கள் மூலம்: தகவல் தொழிநுட்பப் பிரிவின் மூலம் ஆக்கப்பட்ட 6 மற்றும் 10 ஆந் தரங்களின் பிரதான பாடங்களுக்குரிய பாடநூல்களைCD கள் மூலம் சந்தையில் கொள்வனவு செய்ய முடிந்தது.

ஒவ்வொருCD இறுவெட்டுக்களினதும் உள்ளடக்கப் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| தொ. இல. | பாடங்கள் | மொழி |
|---|---|---|
| CD 1 | சிங்கள மொழி மற்றும் இலக்கியம் 6 | சிங்களம் |
| | கணிதம் 6 | சிங்களம் |
| | விஞ்ஞானம் 6 | சிங்களம் |
| CD 2 | கணிதம் 10 | சிங்களம் |
| | பௌத்த சமயம் 10 | சிங்களம் |
| | ஆங்கில மாணவர் புத்தகம் 10 | ஆங்கிலம் |

## 2.2. பாடசாலைச் சீருடை வழங்கல்

2009 ஆம் ஆண்டுக்குரிய அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளில் கல்வி பயிலும் 6 வயது தொடக்கம் 19 வயது வரையான குழுக்களின் சகல மாணவர்களுக்கும் சீருடைகளை வழங்குவதற்காக துணிகள் வழங்கப்பட்டன. அரச அங்கீகாரம் பெற்ற பிரிவெனாக்களின் பிக்கு மாணவர்களுக்கும் காவித் துணிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

| | |
|---|---|
| மாணவர் எண்ணிக்கை | - 39,300,451 |
| பிக்குகளின் எண்ணிக்கை | - 56,065 |
| வருடாந்த செலவினம் | - சுமார் ரூபா 6 மில்லியன |

## 2.3. புலமைப்பரிசில் மற்றும் புலமைப்பரிசில் உதவி

2008 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் 14988 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் 21,035 மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகள் வழங்கப்பட்டன. புலமைப்பரிசில் உதவித் திட்டத்துக்காக 232.6 மில்லியன் ரூபா (அண்ணளவாக) செலவிடப்பட்டது.

- இதனைத் தவிர இந்திய அரசு மற்றும் இந்திய உயரிஸ்தானிகர் அலுவலகத்தின் நிதி அனுசரணையின் கீழ் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் உயரிய தேர்ச்சியினைப் பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் 100 மாணவர்களுக்காக மகாத்மா காந்தி புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.
- ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் 08 மாணவர்கள் பாதுகாவலர்களுடன் கலந்து கொண்டனர்.

## 2.4. பாடசாலை சுகாதாரம் மற்றும் போசாக்கு

அமைச்சின் பாடசாலைச் சுகாதார மற்றும் போசாக்குக் கிளை ஆண்டுக்குள் மேற்கொண்ட பிரதான பணிகள் மற்றும் ஏற்படுத்திக் கொண்ட பல இலக்குகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- **பாடசாலை மாணவர்களுக்காக மதிய உணவு வழங்குதல்**

இதற்காக 6,025 பாடசாலைகள் பங்கேற்கச் செய்யப்பட்டதுடன் 575,689 மாணவர்கள் இதன் மூலம் பயனடைந்தனர். இதற்கென 1,648 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. பொருளாதார கஷ்டம் கொண்ட

பாடசாலையின் மாணவர்களின் போசாக்கு மட்டத்தினை விருத்தி செய்தல், பாடசாலை மாணவர்களுக்கிடையே காணப்படும் உயரிய மந்த போசாக்கினைக் குறைத்தல் மற்றும் கல்விக்கான செயற்பாட்டுப் பங்களிப்பினை உருவாக்க இச்செயற்பாடுகள் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் ஆகும்.

- **உலக உணவு வேலைத்திட்டம்**

இவ்வேலைத்திட்டத்தில் 1,568 பாடசாலைகளுக்கு 373,332 மாணவர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டதுடன் இதற்காக 91 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளாக அமைந்தது,

- ♦ கஷ்டப் பிரதேசங்களின் பாடசாலை மாணவர்களின் நாளாந்தப் பாடசாலைச் சமூக கமளிப்பினை விருத்தி செய்தல்.
- ♦ சம நிறையுணவினை வழங்குவதனை பழக்குதல்.
- ♦ நாளாந்த சமூகமளிப்பினை விருத்தி செய்தல்.
- ♦ பாடசாலை மாணவர்களின் இடைவிலகலைக் கட்டுப்படுத்துவதும் மிக முக்கிய செயற்பாடாகக் கருதப்பட்டது.

- **சுகாதார ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள்**

பிரதான இலக்குகளாக அமைந்தது,

- ♦ சிறந்த சுகாதாரப் பழக்கத்தினை மாணவர்களுக்கிடையே பிரபல்யப்படுத்தல்.
- ♦ தனிநபர் திறமைகளை விருத்தி செய்தல்.
- ♦ சுகாதார ஊக்குவிப்புக் கொள்கைகளை வகுத்தல்.
- ♦ சுகாதார ஊக்குவிப்புக்குப் பொருத்தமான சூழலை உருவாக்குதல்.
- ♦ சுகாதார ஊக்குவிப்புக்குத் தேவையான சேவைகளை வழங்குதல்.
- ♦ சுகாதார ஊக்குவிப்புக்காக பாடசாலைச் சமூகத்திற்கு இடையிலான தொடர்பினை விருத்தி செய்தல்.
- ♦ சுகாதார ஊக்குவிப்புக்காகத் தேவையான தேர்ச்சியினை விருத்தி செய்வதும் இவற்றில் அடங்குகின்றன.

சுகாதார ஊக்குவிப்பு மற்றும்HIV/AIDS தடுப்பு வேலைத்திட்டத்தின் கீழ் அறிவுறுத்தல்களை வழங்குதல், மேலதிக கல்வி உபகரணங்களை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 5 அறிவுறுத்தல் செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன் 313 பேர் பங்கேற்றனர். வளவாளர்கள், ஆரம்ப மற்றும் இடைநிலைப் பிரிவின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டனர்.

- சிறந்த சுகாதாரம்.
- இளம் பராயம்
- போசாக்கு மற்றும் உடற்பயிற்சி
- தொற்றா நோய்கள்
- மனோவியல் நிபுணத்துவம்
- பாலியல் சார் நோய்கள் மற்றும் HIV / AIDS
- சுகாதார ஊக்குவிப்பு

## 2.5. முறைசாராக் கல்வி

இதன் கீழ் கற்றல் மத்திய நிலையங்களை முன்னெடுத்தல், பல்வேறுபட்ட இன மக்களை அறிவுறுத்தல் மற்றும் உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன.

- சமூகக் கற்கை மத்திய நிலையம் : வலய மட்டத்தில் 176 மத்திய நிலையங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் 30,000 இற்கும் மேற்பட்டோர் பயன்பெறுகின்றனர்.
- பணிகளுடன் இணைந்த எழுத்தறிவு மத்திய நிலையங்கள் : மாகாண மட்டத்தில் 36 மத்திய நிலையங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் 31 சிறைச்சாலை வேலைத்திட்டங்களில் 1250 பேர் பங்கேற்றனர்.
- தெருச் சிறார்களுக்காக 5 மத்திய நிலையங்களில் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் இதில் 250 பேர் பயன்பெற்றனர்.
- கட்டாயக் கல்விச் சட்டத்தை அமுல்படுத்துவதற்காக வலய மட்டத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் கட்டாயக் கல்விக் குழுவினை அறிவுறுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் கீழ் பாடசாலை செல்லாத 2132 மாணவர்களை முறையான கல்வியில் ஈடுபடுத்தப்பட முடிந்தது.
- முறைசாராக் கல்விச் செயற்பாடுகள் மற்றும் சமூகக் கற்கை மத்திய நிலைய வேலைத்திட்டங்கள் தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் பாடசாலை செல்லாத மாணவர்கள் தொடர்பான ஆய்வு மேற்பார்வை மதிப்பீட்டுப் பணிகளும் அமுல்படுத்தப் பட்டன.
- 200 முறைசாராக் கல்வித் தொழிலாளர்களை அறிவுறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- 36 சமூகக் கற்கை மத்திய நிலையங்களுக்காக விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.
- மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்காக 6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

## 2.6. விசேட கல்வி

விசேட கல்விக் குழுவைப் பேணுதல், பாடவிதானத்தை அச்சிடல், தேசிய மற்றும் மாகாண வள மத்திய நிலையங்களைப் பலப்படுத்தல்,விசேட பாடசாலை ஆசிரியர்களுக்கு சம்பளம் செலுத்துதல், விசேட தேவைகள் கொண்ட மாணவர்களுக்காக மூக்குக் கண்ணாடி மற்றும் செவிப்புலன் கருவிகளை வழங்குதல், ஆசிரிய பயிற்சி மற்றும் தேவையாக ஏனைய உபகரணங்களை விநியோகித்தலும் இவ்வாண்டின் செயற்பாடுகளுக்கிடையே பிரதான செயற்பாடுகளாகக் காணப்பட்டன. ஆசிரிய பயிற்சியின் கீழ் பயிற்சி வழங்கப்படும் துறைகளுக்கிடையே கீழ்க்குறிப்பிடப்பட்டவைகளும் அடங்கியிருந்தன.

- சைகை மொழிப் பயிற்சி
- பிரெய்ல் புத்தகங்களைத் தயாரித்தல்
- ஒட்சம் பயிற்சி
- பிரெய்ல் பயிற்சி
- விசேட பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சி
- செவிப்புலன் குன்றிய மாணவர்களுக்கான கற்றல் முறைகள் தொடர்பான பயிற்சி

ஆசிரியர் பயிற்சி மற்றும் பிரெய்ல் இயந்திரங்களை வழங்குதலும், பிரெய்ல் அச்சகத்தினைப் புனரமைப்பதற்காகவும் சுமார் 2 மில்லியன் ரூபாவும், விசேட பாடசாலைகளின் 450 ஆசிரியர்களுக்காக சம்பளம் செலுத்துவதற்கு 72 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

## 2.7. சகலருக்கும் கல்வி

சகலருக்கும் கல்வியின் இலக்கினை எட்டுவதற்காக பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இவ்வாண்டுக்குள் விசேடமாகக் கவனம் செலுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் பெற்றுக்கொண்ட முன்னேற்றங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- சகலருக்கும் கல்வி நடுத்தர தசாப்த அறிக்கையினைத் தயாரித்தல் : இறுதிப் பிரதியினையும் தயாரித்து சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் மொழிபெயர்க்க முடிந்தது. இவ்வறிக்கை தெற்காசிய வலய நாடுகளுக்கிடையே சமர்ப்பிக்கப்பட்ட சிறந்த அறிக்கையாக யுனெஸ்கோ, பேங்கொக் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

- உள்ளீட்டுக் கல்வி தொடர்பான தேசிய ஆய்வு : நெரெக் (NEREC)நிறுவனத்துடன் இணைந்து இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் மூலம் இலங்கையில் பாடசாலை செல்லாத பிள்ளைகளை இனங்காண முடிந்தது. இது தொடர்பான அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது.

- ஆரம்ப சிறுபராயப் பாதுகாப்பு மற்றும் கல்வி தொடர்பான புள்ளிவிபரங்களை வகுத்தல் : இது தொடர்பாக மாகாண மட்டத்தில் தகவல்களைப் பெற்று அவற்றைச் சமகாலப்படுத்த முடிந்தது.

- புள்ளிவிபர இயலளவு விருத்தி : இதற்காக தேசிய மற்றும் மாகாண மட்டத்திலான உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களுக்கு இடையே தேசிய மட்டத்தில் 35 பேரும், வடமத்தியில் 37 பேரும், ஊவாவில் 32 பேரும், மத்தியில் 54 பேரும், தென் மாகாணத்தில் 37 பேரும் பயிற்சி பெற்றனர்.

- ஆண்டுக்குரிய கல்விச்சுட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 3 : கல்வியின் பண்புசார் விருத்தி

கல்வியின் துறைசார் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பிரதான தொணிப்பொருளான கல்வியின் பண்புசார் விருத்தி, உள்ளீடுகள் ஊடாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. கல்வியின் உள்ளீடான பாடவிதானம், மாணவர்களுக்கிடையே சமர்ப்பிக்கப்படுவது வகுப்பறைக்குள்ளாகும். இப்பணிகளை பயன்மிக்கதாக மேற்கொள்வதற்காக ஆசிரியர் அபிவிருத்தியினைப் போன்று வகுப்பறையில் இடம்பெறும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மீதும் கூடுதலாகக் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். கோளமய சமூகத்திற்குள் பயன்மிக்க பிரஜைகளாகச் செயற்படுவதற்கு எமது மாணவர்களுக்கு இயலுமையை வழங்குவதற்காக விஞ்ஞானம், தகவல் தொழில்நட்பம், கணிதம், ஆங்கிலம், இரட்டை மொழிக் கல்வி மூலம் பாடங்கள் மீது விசேடமாகக் கவனம் செலுத்தப்பட்டதுடன் சமநிலையான அபிவிருத்தியில் ஈடுபடுத்தப்படும் ‘‘பூரணமான கல்வி’’ தொடர்பில் கவனம் செலுத்தி சமயக் கல்வி, தாய்மொழி,அழகியல் கல்வி, விளையாட்டு மற்றும் உடற்கல்வி ஆகிய பாடங்களை வெற்றிகரமாகக் கற்பிப்பதற்காகவும் விசேட செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன. அவ்வப் பிரிவுகளின் கீழ் முன்னெடுக்கப்பட்ட விசேட செயற்பாடுகள் சுருக்கமாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3.1. ஆரம்பக் கல்வி

ஆரம்பக் கல்வியின் பண்புசார் விருத்தி ஆண்டுக்குள் பிரதான இலக்காகக் காணப்பட்டது. இதற்காக பௌதீக வசதிகளை வழங்குவதனைப் போன்று கற்றல் கற்பித்தல் முறைகளையும் பலப்படுத்துவதற்காகத் தொடர்ந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டுக்குள் அமுல்படுத்தப்பட்ட பிரதான பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- சிறுவர் நட்புறவுப் பாடசாலை சட்டத்தின் பரிமாணம் மற்றும் சுட்டி இனங்காணப்பட்டதுடன் பரிமாணங்களுக்குரிய பிரமாணங்களும்.
- ஐந்தாம் தரத்தில் பாடவிதானத்தின் மாற்றங்களை இனங்காணுதல் : இது தொடர்பான சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டு அது குறித்து மாகாண மற்றும் பாடசாலைகள் அறிவுறுத்தப்பட்டன.
- உயர் மட்டத்திலான கல்விச் செயற்பாடுகளின் கீழ் பாடசாலையின் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல் : பாடசாலைகளில் இருந்து செயற்றிட்ட யோசனைகள் பெறப்பட்டதுடன் பொருத்தமான செயற்றிட்டங்களுக்காக நிதி வழங்கப்பட்டன.
- ஆரம்பப் பாடசாலைகளின் பாட இணைச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் : தேசிய சாரணர் / சிறுவர் நட்புறவு வேலைத்திட்டங்களுக்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.
- NBUCRAM முறையின் கீழ் பண்புசார் உள்ளீடுகளுக்காக நிதி வழங்குதல் : தேசிய பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுக்காக இந்நிதி வழங்கப்பட்டதுடன் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் நிதி வழங்கப்பட்டது.
- தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் : தேசிய பாடசாலைகளின் ஆரம்ப வகுப்பறைகளுக்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்காக தேவையான ஆவணங்கள் வகுக்கப்பட்ட பொருட்களை வழங்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- கட்டிடங்களை அமைப்பதற்காக மற்றும் புனரமைப்பதற்காக நிதி வழங்குதல் : கோரிக்கைகளுக்கு இணங்க தேசிய பாடசாலைகளின் புதிய கட்டிடங்களை நிர்மாணிக்க மற்றும் புனரமைக்கத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

## 3.2. விஞ்ஞானக் கல்வி

விஞ்ஞான எழுத்தறிவு கொண்ட மாணவர் பரம்பரையினரை உருவாக்கும் நோக்குடன் விஞ்ஞானக் கல்வி முன்னெடுக்கப்பட்டதுடன் இதற்காக அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டள்ளன.

- விஞ்ஞானக் கல்வியுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களின் இயலளவை மேம்படுத்தல்
- வலய மற்றும் மாகாண மட்டத்தில் உத்தியோகத்தர்கள் மற்றும் 3500 ஆசிரியர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
- பரிகாரக் கல்வி வேலைத்திட்டங்கள்
- விஞ்ஞானப் பாடம் தொடர்பான பரிகாரக் கல்வி வேலைத்திட்டங்கள் 10 முழு நாட்டினையும் தழுவக் கூடியவாறு நடாத்தப்பட்டன.
- துறைசார் மத்திய நிலைய அபிவிருத்தி
- சகல துறைசார் மத்திய நிலையங்களும் முகாமையாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் மாணவர்களுக்காக வெளிக்களச் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன.
- விஞ்ஞான ஆய்வுகூடங்களுக்காக உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை வழங்குதல்
- சகல 1AB பாடசாலைகளுக்காகவும் விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் வழங்கப்பட்டன.
- தேசிய கணித மற்றும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி : ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் உயரிய புள்ளிகளைப் பெற்று 500 மாணவர்களுக்கிடையே திறமைமிக்க மாணவர்களைக் கிரமமாகத் தேர்ந்தெடுத்து சர்வதேச போட்டிகளில் பங்கேற்கச் செய்யப்பட்டனர். 3 பதக்கங்களும் கிடைக்கப்பெற்றன.

## 3.3. தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பம்

தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பப் பாடத்தை பாடசாலைகளுக்கிடையே விரிவுபடுத்துவதற்காக பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வன்பொருள் மற்றும் வலையமைப்புத் தீர்வுக் குழுவினைத் தாபித்து வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளின் கணினி ஆய்வுகூடங்களில் காணப்படும் வன்பொருள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பாடசாலை மட்டத்தில் வன்பொருள் குழாமினைத் தாபித்தல் மற்றும் அவர்களின் மூலம் பாடசாலைக் கணினி ஆய்வுகூடங்களில் வன்பொருள் மற்றும் வலையமைப்புப் பிரச்சினைகளைத் தீர்த்தல். 260 பாடசாலைகளில் வன்பொருள் குழாம்கள் தாபிக்கப்பட்டன.

- தேசத்துக்கு மகுட அபிவிருத்திக் கண்காட்சிக்குப் பங்களிப்பு வழங்குதல் : தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழிநுட்ப பாடத்துறை சார்ந்த வேலைத்திட்டங்கள் தொடர்பான கண்காட்சிக்க கூடங்கள் தேசத்துக்கு மகுடக் கண்காட்சிக் கூடத்தில் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தன.

- தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்ப வர்த்தகச் செயற்பாடுகளின் வெளி வேலைத்திட்டங்கள் (IT/BPO) பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலைகளை விட்டுவிலகிய மாணவர்களுக்காக நடாத்துதல் : தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) மற்றும் தகவல் தொடர்புசாதனத் தொழில்நுட்பப் பாடம் சார்ந்த கைத்தொழிலாளர்களைக் கொண்ட குழு மூலம் கல்வி அமைச்சின் உதவியுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களை தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப வர்த்தகம் தொடர்பாக அறிவுறுத்தும் நோக்குடன் அதனுடன் தொடர்புபட்ட செயலமர்வு, கண்காட்சி, கருத்தரங்கு மற்றும் ஆலோசனை வேலைத்திட்டங்கள்

மாகாண மட்டத்தினைப் போன்று மாவட்ட அடிப்படையிலும் முன்னெடுக்கப்படுகின்றன. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய மட்டத்திலான கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

- Interactive White Board செயற்றிட்டம் : குழுSmart Technologies நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும்SMART வகையின்Interactive White Board 09 வழங்கல்களாக கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டது. இவ்வுபகரணங்கள் மாகாணத்தினைப் பிரதிநித்துவப்படுத்தக் கூடியவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான எட்டு பாடசாலைகள் மற்றும் ருவன்புர தேசிய கல்விக் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.
- அத்துடன் இவ்வுபகரணங்களைப் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சியும் உரிய உபகரணங்களை வழங்கிய நிறுவனங்கள் மூலம் பெயரிடப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. இவ்வுபகரணங்கள் தற்போது வெற்றிகரமாகப் பாடசாலைகள் மற்றும் கல்விக் கல்லூரிகளில் அமுல்படுத்தப்பட்டதுடன் தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பப் பாடத்திற்கு மேலதிகமாக ஏனைய பாடங்கள் கற்பிக்கப்படும் ஆசிரியர்களை இது தொடர்பில் பயிற்சியளித்தல் மற்றும் மாணவர்களின் பயன்பாட்டுக்குத் தேவையான பாட இணை மென்பொருட்களைத் தயாரித்தில் கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்புசாதனத் தொழில்நுட்பக் கிளையின் மூலம் மேற்கொள்ளப்பட்டன.
- ஆரம்பப் பாடசாலைகளுக்காக தகவல் தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்ஊ உரிய பாடங்களை உள்ளடக்கி வகுக்கும் செயற்பாடுகளை ஆரம்பித்தல் மற்றும் அதற்காக குழுவை நிறுவுதல் : தகவல் தொழில்நுட்ப மற்றும் உரிய பாடத் தேர்ச்சி மிக்க ஆசிரியர்களைப் போன்று ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களைக் கொண்ட 14 பேர்களைக் கொண்ட குழாம் இதற்காகத் தாபிக்கப்பட்டன. 1 - 5 தரங்களுக்காக கணிதம் மற்றும் தாய் மொழிக்கான உள்ளடக்கங்களைத் தயாரித்துப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## 3.4. ஆங்கில மொழி

சர்வதேச மொழியான ஆங்கில மொழியை வெற்றிகரமாகப் பாடசாலைகளுக்குக் கற்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன.

- வதிவிட வசதிகள் கொண்ட ஆசிரியர் பயிற்சி மத்திய நிலையம் (RESC) இரண்டு இவ்வாண்டில் தாபிக்கப்பட்டது.
- புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்காக வினைத்திறன் பயிற்சியினை வழங்கும் போது கஷ்டப் பாடசாலைகளுக்கு அவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.
- தேசிய மட்டத்திலான ஆங்கில முகாம்கள் மற்றும் போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளன. வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடம் தொடர்பான சித்தியினை உயர் மட்டத்துக்கு மேம்படுத்துவதற்கான பயிற்சி வேலைத்திட்டங்கள், உபகரணங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகளை விநியோகித்தலும், வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.
- பேராதனை தேசிய கல்விக் கல்லூரிக்கு உபகரணங்களை வழங்கும் செயற்பாடுகளும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன.

## 3.5. இரட்டை மொழிக் கல்வி

இரட்டை மொழி வேலைத்திட்டங்கள் கொண்ட பாடசாலை எண்ணிக்கையினை அதிகரிப்பதனைப் போன்று இரட்டை மொழிக் கல்விப் பிரவேசங்களுக்கான சந்தர்ப்பத்தினை அதிகரிக்க நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டன. ஆண்டுக்குள் 192 தேசிய பாடசாலைகள், 318 மாகாணப் பாடசாலைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட 37 தனியார் பாடசாலைகளாக 547 பாடசாலைகளும் இரட்டை மொழிக் கல்வி வேலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக 2009 - 2011 மூன்றாண்டு காலத்துக்காக இரட்டை மொழிக் கல்வி வேலைத்திட்டம் தொடர்பான தேசிய வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டன.

விஞ்ஞானப் பாடவிதானத்துக்கு மேலதிகமாக வர்த்தகம் மற்றும் கலைப் பாடவிதானத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டமை விசேட பணிகளாகும்.

## 3.6. சமய மற்றும் விழுமியக் கல்வி

சகல பாடசாலைகளிலும் சமயக் கல்வி மற்றும் விழுமியத்தினை மேம்படுத்துவது இவ்வாண்டின் பிரதான இலக்காகும். இதற்காக "விழுமியமிக்க மாணவர் செயற்பாடுகள்" என்ற வேலைத்திட்டத்தில் சகல பாடசாலை மாணவர்களையும் தழுவக் கூடியவாறு நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டன. இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான அடிப்படைச் செயற்பாடுகள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், விடயப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட சமயப் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் அறிவுறுத்துவதாக அமைந்தன.

## 3.7. சிங்கள மொழி

கஷ்டப் பிரதேச பாடசாலை மாணவர்களின் க.பொ.த. (சா.த.) சிங்கள மொழி மற்றும் இலக்கியப் பாடப் பெறுபேற்றினை 10% இனால் மேம்படுத்த இலக்காகக் கொள்ளப்பட்டவேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதன் கீழ் சகல மாகாணங்களிலும் கஷ்டப் பிரதேசங்களின் பாடசாலை ஆசிரியர்களின் மொழி இயலுமைகளை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் பரீட்சைப் பெறுபேறுகளில் முன்னேற்றங்களையும் காண முடிந்தன. சிங்கள மொழி மூலப் பாடசாலை மாணவர்களின் மொழித் தேர்ச்சியினை விருத்தி செய்வதற்காக சிங்கள மொழி மற்றும் இலக்கியப் போட்டிகள் பாடசாலை, வலயம், மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் நடாத்தி வெற்றியீட்டியோருக்கு சான்றிழ்கள், பதக்கங்கள், பரிசில்களும் வழங்கப்பட்டன.

## 3.8. தமிழ் மொழி

மாணவர்களின் மொழி அறிவு மட்டத்தினை விருத்தி செய்வதற்காகவும், பரீட்சைகளின் அடைவு மட்டங்களை மேம்படுத்துவதும் இவ்வாண்டின் பிரதான இலக்காகக் கொள்ளப்பட்டது. இதற்காக பாடசாலை வலயம், மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் போட்டிகள் நடாத்தப்பட்டதுடன் வெற்றியீட்டியவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மாணவர்களின் மொழித் திறமையினை விருத்தி செய்வதற்காக வருடாந்தம் பிரசுரிக்கப்படும் "கூர்மதி" கல்விச் சஞ்சிகை இவ்வாண்டில் பிரசுரித்து சகல தமிழ் மொழி மூலப் பாடசாலைகளும் பிரதிகள் வழங்கப்பட்டன.

## 3.9. அழகியற் கல்வி

மாணவர்களின் திறமை விருத்தி மற்றும் பாடப் பெறுபேறுகளை மேம்படுத்துவதனை இலக்காகக் கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் இவ்வாண்டில் அமுல்படுத்தப்பட்டன.

- சித்திரம், கலை, நடனம் (சிங்களம் / தமிழ்),சங்கீதம் (மேற்கத்தேய / கீழைத்தேய) மற்றும் நாடகம், நடனக்கலை ஆகிய பாடங்களின் பெறுபேறுகள் முன்னைய ஆண்டை விட 5% இனால் மேம்படுத்துவதற்காக ஆசிரிய தரச் சுட்டிக் கருத்தரங்கு, மாணவர் முகாம் மற்றும் விசேட கலந்துரையாடல்கள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் ஆண்டின் பெறுபேறுகளை 4.3% இனால் மேம்படுத்த முடிந்தது.

- திறமைகள், கண்காட்சிகள் ஊடாக மாணவர் திறமைகளை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் 2100 மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள முடிந்தது.
- நடனம், சங்கீதம், சித்திரம், நடனக் கலை மற்றும் மேற்கத்தேய சங்கீதம் ஆகிய பாடங்களுக்குரிய அகில இலங்கைப் போட்டிகளை நடாத்த முடிந்ததுடன் அதன் மூலம் மாணவர்களின் விருத்தியினைக் காண முடிந்தது. 1200 சித்திரக் கலை மாணவர்கள் 9300 நடனக் கலை, 5100 சங்கீத மாணவர்கள், நடனம் மற்றும் இசைக்கலையின் 800 மாணவர்கள் மற்றும் மேற்கத்தேய சங்கீத 450 மாணவர்களையும் உள்ளடக்கி விசேட திறமைகள் கொண்டோருக்கு சான்றிதழ்களை வழங்க முடிந்தது.
- அதிபர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்காக அழகியற் கலை உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டதுடன் இதற்காக 20 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. அவ்வப் பாடங்களுக்காக உபகரணங்களைப் பெற்றுக்கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

  சித்திரக்கலை : 150 பாடசாலைகள், நடனப் பாடம் : 50 பாடசாலைகள், சங்கீதப் பாடம் : 50 பாடசாலைகள், மேற்கத்தேய சங்கீதம் : 15 பாடசாலைகள்

## 3.10. விளையாட்டு மற்றும் உடற்கல்வி

மாணவர்களின் முழுமையான விருத்திக்காகப் பயன்படுத்தப்படும் விளையாட்டு மற்றும் உடற்கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் இவ்வாண்டுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

- சுகாதாரம் மற்றும் உடற்கல்விப் பாடம் தொடர்ந்தும் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றன. இதற்காகத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் தேசிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- ஆரம்பத்தைப் போன்று இடைநிலைப் பாடசாலைகளுக்கும் விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக விபரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டன.
- விளையாட்டுப் பாடசாலைச் செயற்றிட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதனூடாக திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களின் திறமை தொடர்ந்தும் விருத்தி செய்யப்படுகின்றன. அப்பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்கவும், பாடசாலைச் செயற்பாடுகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்காகவும் இவ்வாண்டில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- கோட்ட, வலய மற்றும் மாகாண போட்டிகளில் வெற்றியீட்டிய விளையாட்டு வீரர்களின் திறமையினைத் தொடர்ந்தும் மேம்படுத்துவதற்காக அகில இலங்கை பாடசாலை வியையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படுவதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ மாணவிகளுக்கு சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் கலந்துகொள்ள வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.
- வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் அழைப்புக்களுக்கு அமைய பயிற்சி முகாம்கள் மற்றும் போட்டிகளுக்கு மாணவர்கள் உட்பட ஆசிரியர்களைப் பங்கேற்கச் செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- அகில இலங்கை ஆசிரிய விளையாட்டுப் போட்டியினை நடாத்துவதற்குத் தேவையான ஒழுங்கு விதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அடுத்த ஆண்டில் முதற்பகுதியில் இப்போட்டியினை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3.11. தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி

தோட்டப் பாடசாலைகளின் பௌதீக விருத்தியினைப் போன்று கல்வியின் பண்புசார் விருத்திகள்

தொடர்பிலும் விசேடமாகக் கவனஞ் செலுத்தப்பட்டன. தோட்டப் பாடசாலைகள் விரிவடைந்துள்ள பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- தோட்டப் பாடசாலை மாணவர்களின் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களின் பெறுபேற்று விருத்தியினை இலக்காகக் கொண்டு மத்திய மாகாணத்தின் அப்பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் அறிவினை விருத்தி செய்வதற்காக ஏழு ஆசிரிய பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டமை.
- தோட்டப் பாடசாலைகளில் க.பொ.த. (உ.த.) மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்காக மத்தி, ஊவா, சப்ரகமுவ, மேற்கு, தெற்கு மற்றும் வடமேல் ஆகிய மாகாணங்களில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், பொருளியல், புவியியல் மற்றும் வரலாற்றினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக 64 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

## 3.12. முஸ்லிம் பாடசாலை அபிவிருத்தி

- தேசிய கல்வியின் நோக்கங்களுக்கு அமைய முஸ்லிம்களின் தேசிய அடையாளங்களைப் பாதுகாத்து முஸ்லிம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- முஸ்லிம் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையினை முன்னெடுப்பதற்காகத் தேவையான தகவல்கள் இவ்வாண்டில் சேகரிக்கப்பட்டன. அத்துடன் மௌலவி ஆசிரியர் நியமனத்தை வழங்கத் தேவையான தகவல்கள் உரிய கிளைகளுக்கு அனுப்புவதற்கும் யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட ஆவணங்களை விரிவான முறையில் தயாரிப்பதற்கும், முஸ்லிம் பாடசாலைகளுக்காக உரிய பாடசாலைத் தவணை நாட்காட்டியினைத் தயாரித்து விநியோகிப்பதற்கும், பாடசாலை வெளி மதிப்பீட்டுச் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கும் இவ்வாண்டில் முன்னுரிமை வழங்கிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## 3.13. கல்வியின் பண்புசார் விருத்தியினை உறுதிசெய்தல்

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைப் பலமுடன் முன்னெடுப்பதற்காக பாடசாலைகளுக்கு உதவும் வகையில் அமைச்சு மட்டத்தில் மேற்பார்வைப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. தரங்களைத் தயாரித்தலும், அது தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவத்தினைப் பலப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தக்கூடிய முறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- தரத்தினை அடிப்படையாகக் கொண்ட புதிய மதிப்பீட்டு மேற்பார்வைக் கேந்திரங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் பலப்படுத்தல் : இதற்காக அதிபர்கள் மற்றும் பாடசாலை முகாமைத்துவக் குழு அங்கத்தவர்களுக்காக ஆறு செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன் 751 பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.
- 2008 / 06 சுற்றறிக்கையின் விடய பணிப்பாளர்களுக்கு அறிமுகப்படுத்தல் : ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்கள் 233 பேர்களுக்காக 7 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- மாகாணப் பாடசாலைகளை அறிவுறுத்தல் : 178 அதிபர்களை அறிவுறுத்துவதற்காக 8 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- ஆசிரிய ஆலோசனைத் தேர்ச்சியினை அறிமுகப்படுத்தல் : ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்கள் 44 பேர்களுக்காக ஒரு செயலமர்வினை நடாத்தி ஆசிரிய ஆலோசகர் தேர்ச்சி தொடர்பாக அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.


## 3.14. கல்வி அடைவுமட்டம் தொடர்பான முன்னேற்றங்கள்

கல்வியின் பண்புசார் விருத்திக்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாட்டுப் பயன்களை அளவீடு செய்வதற்கான சுட்டி, பகிரங்கப் பரீட்சை, இதில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேற்றுப் பகுப்பாய்வு அட்டவணை 3.14.1. மற்றும் 3.14.1. வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.14.1. : மொழிகளுக்கு அமைய 5ம் தரப் புலமைப்பரிசில் பெறுபேறுகள் - 2008**

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | | | 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் - 2008 இல் 70 புள்ளிகளை விடக் கூடுதலாகப் பெற்ற மாணவர்களின் விகிதாசாரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சிங்கள மொழி | தமிழ் மொழி | பரீட்சைக்குத் தோற்றிய மொத்த எண்ணிக்கை | சிங்கள மொழி | | தமிழ் மொழி | | மொத்தம் | |
| | | | | எண்ணிக்கை | விகிதாசாரம் | எண்ணிக்கை | விகிதாசாரம் | எண்ணிக்கை | விகிதாசாரம் |
| 2008 | 211,004 | 64,117 | 275,121 | 88,414 | 41.90 | 20,130 | 31.40 | 108,544 | 39.45 |

**வரைபு 3.14.1. : 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை - 2008, 70 புள்ளிகளை விடக் கூடுதலாகப் பெற்ற மாணவர் விகிதாசாரம்**





கல்வி பண்புசார் விருத்தியின் பயனை அளவிட மற்றுமொரு சுட்டியாக அமைவது க.பொ.த. (சா.த.) பரீட்சையாகும். 2006 - 2008 ஆண்டுகளுக்கிடையே சாதாரணப் பரீட்சைப் பெறுபேறுகளின் ஒப்பீடுகள் மற்றும் வரைபுகள் 3.14.2., 3.14.3. மற்றும் 3.14.4. இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.14.2. : க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை 2006 - 2008**

| பாடங்கள் | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|
| ஆங்கிலம் | 95,356 | 110,227 | 86,224 |
| கணிதம் | 110,519 | 134,053 | 136,909 |
| விஞ்ஞானம் | 125,212 | 132,564 | 133,088 |


**வரைபு 3.14.2. : க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை 2006 - 2008**



**அட்டவணை 3.14.3. : க.பொ.த. (சா.த.) பரீட்சை - 2008**
**பிரதான பாடங்களுக்கமைய சித்தியடைந்த மாணவர் விகிதாசாரம்**

| பாடங்கள் | 2008 |
|---|---|
| சிங்களம் | 81% |
| தமிழ் | 75% |
| ஆங்கிலம் | 31% |
| கணிதம் | 51% |
| விஞ்ஞானம் | 47% |
| தகவல் தொழில்நுட்பம் | 88% |


**வரைபு 3.14.3. :க.பொ.த. (சா.த.) பரீட்சை - 2008**
**பிரதான பாடங்களுக்கமைய சித்தியடைந்த மாணவர் விகிதாசாரம்**




**அட்டவணை 3.14.4. : க.பொ.த. (சா.த.) பரீட்சை - 2008**
**பிரதான பாடங்களுக்கமைய பரீட்சைக்குத் தோற்றிய மற்றும் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை**

| பாடங்கள் | பரீட்சைக்குத் தோற்றிய எண்ணிக்கை | சித்தியடைந்த எண்ணிக்கை |
|---|---|---|
| சிங்களம் | 223,793 | 181,921 |
| தமிழ் | 57,864 | 43,427 |
| ஆங்கிலம் | 281,136 | 86,224 |
| கணிதம் | 268,133 | 136,909 |
| விஞ்ஞானம் | 280,718 | 133,088 |
| தகவல் தொழில்நுட்பம் | 38,759 | 33,930 |

**வரைபு 3.14.4. : க.பொ.த. (சா.த.) பரீட்சை - 2008 பிரதான பாடங்களுக்கமைய பரீட்சைக்குத் தோற்றிய மற்றும் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை**





வரைபு 3.14.5. மற்றும் 3.14.6. இல் குறிப்பிடப்பட்டுள்ள 2008 உயர்தரப் பரீட்சைப் பகுப்பாய்வாகும். விஞ்ஞான மற்றும் கணிதப் பாடவிதானம் தொடர்பில் கூடுதலான கவனம் கல்வி முறைமையில் இருக்க வேண்டும் என்பது இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது.

**அட்டவணை 3.14.5. : க.பொ.த. (உ.த.) பரீட்சை பாடவிதானத்துக்கு அமைய பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காகத் தகைமைபெற்ற மாணவர் எண்ணிக்கை - 2008**

| பாடங்கள் | பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்கை | பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காகத் தகைமை பெற்ற எண்ணிக்கை |
|---|---|---|
| விஞ்ஞானப் பிரவு | 18,928 | 6,696 |
| கணிதப் பிரிவு | 13,814 | 4,680 |
| வர்த்தகப் பிரிவு | 36,772 | 23,261 |
| கலைப் பிரிவு | 59,048 | 40,353 |


**வரைபு 3.14.5. : க.பொ.த. (உ.த.) பரீட்சை பாடவிதானத்துக்கு அமைய பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காகத் தகைமை பெற்ற மாணவர் எண்ணிக்கை - 2008**




**அட்டவணை 3.14.6. : க.பொ.த. (உ.த.) பரீட்சை**
**பாடவிதானத்துக்கு அமைய பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காகத் தகைமை பெற்ற மாணவர் விகிதாசாரம் 2005 - 2008**

| ஆண்டு | விஞ்ஞானப் பிரிவு | கணிதப் பிரிவு | வர்த்தகப் பிரிவு | கலைப் பிரிவு |
|---|---|---|---|---|
| 2005 | 32.86 % | 34.03 % | 56.4 % | 60.55 % |
| 2006 | 33 % | 32.97 % | 62.15 % | 63.01 % |
| 2007 | 34.87 % | 33.42 % | 61.24 % | 65.31 % |
| 2008 | 35.38 % | 33.88 % | 63.26 % | 68.34 % |

**வரைபு 3.14.6. : க.பொ.த. (உ.த.) பரீட்சை**
**பாடவிதானத்துக்கு அமைய பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காகத் தகைமை பெற்ற மாணவர் விகிதாசாரம் 2005 - 2008**



# அத்தியாயம் 4 : மனிதவள வழங்கல் மற்றும் அபிவிருத்தி

கல்வி வழங்கலுக்காகத் தேவையான மனித வளம் மிக முக்கியமானது என்பதுடன் இம்மனித வளத்தின் கொள்ளளவு மட்டத்தினை மேம்படுத்துவது மிக முக்கியமான தேவையாகும். 2008 ஆம் ஆண்டில் இதற்காக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

## 4.1. ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல்


2008 ஆம் ஆண்டில் தேசிய பாடசாலைகளுக்காக 427 தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் மாகாணப் பாடசாலைகளின் சேவைக்காக 2191 பேர் வழங்கப்பட்டனர். 2005 - 2008 ஆம் ஆண்டுக்குள் அரச பாடசாலைகளிளின் ஆசிரியர் விபரம் கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.1.1. : ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல் (2005 - 2008)**

| ஆண்டு | கல்வி அமைச்சினால் ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ளல் | | | | மாகாண சபையினால் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ளல் | |
|---|---|---|---|---|---|---|
| | *தேசிய பாடசாலைகளுக்காக* | | *மாகாணப் பாடசாலைகளுக்காக* | | *ஆசிரியர் நியமனம்* | *ஏனைய நியமனங்கள்* |
| | *பட்டதாரி* | *தேசிய போதனாவியல் டிப்ளோமாதார்கள்* | *பட்டதாரி* | *தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்கள்* | | |
| **2005** | 2923 | 383 | 326 | 2326 | 1925 | -- |
| **2006** | 2444 | 887 | 960 | 2451 | 2960 | -- |
| **2007** | -- | 408 | 1490 | 2191 | 967 | 321 |
| **2008** | -- | 427 | 671 | 2191 | 3070 | 1119 |

*மூலம் - கல்வி அமைச்சு*

**வரைபு 4.1.1. : அரச பாடசாலைகளில் ஆசிரியர் விருத்தி 2005 - 2008**




*மூலம் - கல்வி அமைச்சு*

போதியளவு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பாடசாலைகளுக்கிடையே விநியோக மற்றும் ஒரு சில பாடங்களுக்கு அமைய நியமனம் வழங்குவதில் பிரச்சினைகள் காணப்பட்டன.

**அட்டவணை 4.1.2. : மாவட்டங்களுக்கமைய மொத்த மாணவர் ஆசிரியர் விகிதாசாரம்**

| மாவட்டம் | மாணவர் / பட்டதாரி விகிதாசாரம் | மாணவர் / பயிற்சி ஆசிரியர் விகிதாசாரம் | மாணவர் பயிற்சி ஆசிரியர் விகிதாசாரம் | மொத்த மாணவர் / ஆசிரியர் விகிதாசாரம் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 49.84 | 40.58 | 2119.08 | 22.13 |
| கம்பஹா | 55.02 | 37.55 | 3035.27 | 22.16 |
| களுத்துறை | 53.00 | 34.52 | 988.23 | 20.47 |
| கண்டி | 47.95 | 26.50 | 376.82 | 16.33 |
| மாத்தளை | 42.32 | 25.19 | 343.55 | 15.10 |
| நுவரெலியா | 72.17 | 30.33 | 101.27 | 17.64 |
| காலி | 51.53 | 30.33 | 1687.92 | 18.88 |
| மாத்தறை | 36.44 | 30.29 | 1497.60 | 16.36 |
| அம்பாந்தோட்டை | 40.72 | 26.39 | 996.99 | 15.76 |
| யாழ்ப்பாணம் | 43.04 | 33.66 | 1519.75 | 18.66 |
| கிளிநொச்சி | 138.55 | 43.62 | 509.31 | 31.15 |
| மன்னார் | 80.76 | 40.38 | 366.05 | 25.08 |
| முல்லைத்தீவு | 114.72 | 43.62 | 358.51 | 29.04 |
| வவுனியா | 69.02 | 26.50 | 596.13 | 18.55 |
| அம்பாறை | 79.34 | 27.38 | 451.56 | 19.48 |
| மட்டக்களப்பு | 66.62 | 37.03 | 1196.68 | 23.34 |
| திருகோணமலை | 107.93 | 30.91 | 701.57 | 23.23 |
| குருநாகல் | 40.96 | 25.09 | 1118.86 | 15.34 |
| புத்தளம் | 77.40 | 34.74 | 895.72 | 23.35 |
| அனுராதபுரம் | 66.12 | 26.67 | 144.84 | 16.80 |
| பொலனறுவை | 83.62 | 32.92 | 183.14 | 20.92 |
| பதுளை | 56.70 | 24.56 | 156.07 | 15.44 |
| மொனறாகலை | 61.19 | 29.47 | 166.36 | 17.77 |
| கேகாலை | 45.94 | 24.51 | 492.66 | 15.48 |
| இரத்தினபுரி | 48.33 | 29.89 | 547.65 | 17.87 |
| இலங்கை | 53.37 | 30.27 | 441.54 | 18.50 |

*மூலம் - கல்வி அமைச்சு*

## 4.2. தேசிய கல்விக் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய கல்லூரிகளில் மேற்கொள்ளப்படும் நிறுவன ஆசிரியர் பயிற்சிகள்

இதன் கீழ் புதிய ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ளல் மற்றும் பயிற்சியளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4.2.1. ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ளல்

புதிய ஆசிரிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவது கல்வி அமைச்சின் மூலமாகும். கல்விக் கல்லூரிகளில் அவர்களுக்கு மூன்றாண்டு காலப் பயிற்சி வழங்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து அவர்கள் தேசிய பாடசாலைகளுக்கும், மாகாணப் பாடசாலைகளுக்கும் நியமிக்கப்படுகின்றனர். பட்டதாரி ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளும் சந்தர்ப்பம் கல்வி அமைச்சினைப் போன்று மாகாண சபைகளுக்கும் காணப்படுகின்றன.

### 4.2.2. தேசிய கல்விக் கல்லூரிகள் மேற்கொள்ளப்படும் நிறுவன ரீதியான பயிற்சி மற்றும் ஏனைய வேலைத்திட்டங்கள்

2008 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு புதிதாக 3000 ஆசிரிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

மூன்றாண்டு காலப் பயிற்சியினைப் பூர்த்தி செய்த ஆசிரிய மாணவர்களுக்காக போதனாவியல் டிப்ளோமா விழா நடாத்தி டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பயிற்றப்படாத பட்டதாரிகளை பயிற்றப்பட்ட பட்டதாரிகளாக விருத்தி செய்வதற்காக பட்டப்பின் பட்ட டிப்ளோமாப் பாடநெறி தொடர்வதற்காக பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டனர்.

ஆசிரிய மாணவர்களின் தொடர்புசாதன திறமைகள் மற்றும் ஆக்கத் திறமையினை விருத்தி செய்வதற்காக கல்விக் கல்லூரிகளுக்கு இடையிலான சஞ்சிகை பிரசுரிக்கப் பட்டது.

தகவல் தொடர்புசாதனத் தொழில்நுட்பத்துக்குரிய அறிவு மற்றும் பிரயோக இயலுமையினை விருத்தி செய்வதற்காக தொடர்புசாதனத் தொழில்நுட்ப கண்காட்சி ருவன்புர தேசிய கல்விக் கல்லூரியில் நடாத்தப்பட்டது.

500 கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் 3500 ஆசிரிய மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அடிப்படை அம்சங்களை அறிமுகப்படுத்துவதற்கான பயிற்சி அமர்வு (INTEL வேலைத்திட்டம்) நடாத்தப்பட்டது.

தேசிய கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள் செயற்பாட்டு ஆய்வுகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### 4.2.3. புதிய கல்விக் கல்லூரி ஆரம்பித்தல்

இவ்வாண்டில் பேராதனை ஆசிரிய கல்லூரி, தேசிய கல்விக் கல்லூரியாகத் தற்காலிகமாகத் தாபிக்கப்பட்டதுடன் இதன்மூலம் கல்வித் துறையில் பல்வேறுபட்ட தொழில்சார் ஊழியர்களின் தேர்ச்சியினை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

## 4.3. கல்வி முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ விருத்தி

இவ்வாண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு இடையே

மனிதவள விருத்தி கொள்கையினை வகுத்தல் மற்றும் அது தொடர்பாக கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்.

கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பை மீள் கட்டமைக்கும் நடவடிக்கையாக உயரிய முகாமைத்துவத் தரங்களின் தொழில் விபரங்களைத் தயாரிப்பது மிக முக்கியமாகக் கொள்ளப்பட்டது.

இதற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் வெளிநாட்டினைப் போன்று உள்நாட்டுப் பயிற்சிக்காகவும் ஈடுபடுத்தப்பட்டதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.3.1. : உத்தியோகத்தர்களுக்காக உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள்**

| பணிகள் | பயிற்சித் துறை | எண்ணிக்கை |
|---|---|---|
| கல்வி அமைச்சு / மாகாண - மனிதவள விருத்தி - வெளிநாடு | கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை மற்றும் மனிதவளத் தகவல் முறைமை தொடர்பான கல்விச் சுற்றுலா | இ.க.நி.சே. உத்தியோகத்தர் 21<br>இ.நி.சே. உத்தியோகத்தர் - 2 |
| | பாடசாலைகளைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் - குறுகிய காலம் | பதிவிநிலை உத்தியோகத்தர் - 25 |
| பயிற்சி மற்றும் அபிவிருத்தி - உள்நாடு | ஆங்கில டிப்ளோமா பாடநெறி | இ.க.நி.சே. உத்தியோகத்தர் - 6 |
| | | இ.நி.சே. உத்தியோகத்தர் - 21 |
| | | எழுதுவினைஞர் மற்றும் சமமான சேவைகள் 17 |
| | முகாமைத்துவ மானி பட்டப்பின் பட்ட டிப்ளோமா | கணக்காளர் - 2 |
| | கலைமானி | இ.நி.சே. உத்தியோகத்தர் - 1 |
| | பட்டப்பின் பட்ட பாடநெறி | இ.நி.சே. உத்தியோகத்தர் - 2 |
| | புத்தகம் கட்டுநருக்கான பயிற்சிகள் | அலுவலக ஊழியர் சேவை - 4 |
| | கணினி செயற்பாட்டு அனுமதிப்பத்திர சான்றிதழ் பாடநெறி | எழுதுவினைஞர் மற்றும் சமமான சேவைகள் 4 |
| | அலுவலக ஊழியர் சேவை பயிற்சிச் செயலமர்வு | அலுவலக ஊழியர் சேவை - 150 |
| | தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் கல்விசாரா ஊழியர் சபைக்கு பயிற்சியளிக்கும் வேலைத்திட்டம் | மேற்கு, வடமேல், தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் பாடசாலைத் தொழிலாளர்கள் (நிரந்தரம்) 900 ஊழியர்களுக்காக ஒருநாள் பயிற்சிச் செயலமர்வு |

# அத்தியாயம் 5 : பௌதீக வசதிகளை வழங்கல்

இவ்வத்தியாயத்தின் கீழ் கட்டிட நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்புப் பிரிவின் பணிகளைப் போன்று கற்றல் - கற்பித்தல் உபகரணங்களை வழங்குவது தொடர்பான தகவல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 5.1. கட்டிட நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு

இவ்வாண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்புக்கள் 85 என்பதுடன் அதற்காக 920 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. புனரமைக்கப்பட்ட எண்ணிக்கை 87 ஆகும். பயன்கள் பெற்ற நிறுவனங்களுக்கு இடைய தேசிய பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள், ஆசிரிய கல்லூரி, தேசிய கல்விக் கல்லூரிகளைப் போன்று அமைச்சின் வளாகமும் அடங்குகின்றது. நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்புத் தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| வகைகளுக்கு அமைமயப் பிரிவுகள் | புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் / புனரமைப்பு தொடர்பான விபரங்கள் (செயற்றிட்டத்திற்கு அமைய) | மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட நிதி | செலவான நிதி | புனரமைக்கப்பட்ட எண்ணிக்கை | செலவிட்ட நிதி | செலவிட்ட நிதி | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேசிய பாடசாலை | ஆரம்பப் பிரிவு | 8 | 60,000,000.00 | 62,860,000.00 | 10 | 28,000,000.00 | 18,800,000.00 | 8 |
| தேசிய பாடசாலை | இடைநிலைப் பிரிவு | 28 | 525,000,000.00 | 400,252,000.00 | 30 | 205,000,000.00 | 182,630,000.00 | 28 |
| மாகாணப் பாடசாலை | சகல பாடசாலைகளிலும் அவசர புனரமைப்புக்களை மேற்கொள்ளல் | 4 | 5,000,000.00 | 40,731,485.00 | | | | 4 |
| மாகாணப் பாடசாலை | புதிய மாதிரி ஆரம்பப் பாடசாலைகளை விருத்தி செய்தல் | 4 | 126,000,000.00 | 86,598,548.53 | | | | 4 |
| மாகாணப் பாடசாலை | தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலைகளை விருத்தி செய்தல் | 1 | 65,000,000.00 | 37,541,690.33 | | | | 1 |
| மாகாணப் பாடசாலை | இசுரு பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் | 5 | 100,000,000.00 | 52,523,000.00 | | | | 5 |
| ஆசிரிய கல்லூரி | பிரதேச ஆங்கில ஆலோசகர் மத்திய நிலையங்களை நிர்மாணித்தல் | 13 | 50,000,000.00 | 157,158,006.26 | | | | 13 |
| ஆசிரிய கல்லூரி | ஆசிரிய கல்லூரி மற்றும் ஆசிரிய மத்திய நிலையம் | 6 | 8,000,000.00 | 11,736,670.32 | 12 | 20,000,000.00 | 31,832,685.80 | 6 |
| தே.க.க. | தேசிய கல்விக் கல்லூரி | 5 | 4,000,000.00 | 12,045,663.58 | 25 | 45,000,000.00 | 22,138,963.60 | 5 |
| தேசிய பாடசாலை | விசேட கல்விப் பிரிவினை நவீனமயப்படுத்தல் | | | | 9 | 4,000,000.00 | 2,818,442.00 | |
| தேசிய பாடசாலை | SPACE செயற்றிட்டம் | 10 | 14,000,000.00 | 12,145,663.58 | | | | 10 |
| இசுருபாய | புதிய நிர்மாணிப்பு | 1 | 47,000,000.00 | 47,000,000.00 | 1 | 12,000,000.00 | 9,739,763.00 | 1 |
| | **மொத்தம்** | 85 | 1,004,000,000.00 | 920,592,727.60 | 87 | 314,000,000.00 | 267,959,854.40 | 85 |

## 5.2. கற்றல் - கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல்

கல்வி பண்புசார் விருத்தி இலக்கினை நிவர்த்தி செய்வதற்காக கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்குத் தேவையான பௌதீக வளத்தினைத் தீர்மானிப்பது விடயப் பணிப்பாளர்களினால் விண்ணப்பிக்கும் கற்றல் உபகரண பொருள் ஆக்க கல்வி அமைச்சின் மத்திய பெறுகைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இப்பெறுகைப் பிரிவினால் விரிவான தொழில்நுட்ப அங்கீகாரத்தினை வழங்கியதன் பின்னர் உரிய பாடப் பணிப்பாளரினால் அக்கற்றல் உபகரணப் பொருட்கள் எதுவென தேசிய பாடசாலை, எந்தளவு வழங்க முடியும் என்பது தொடர்பிலும் வழங்கல் கிளைக்கு அறிவிக்கப்படுகின்றன. ஒரு சில விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் தேசிய பாடசாலைகளைப் போன்று மாகாணப் பாடசாலைகளுக்கும் நிரல் அமைச்சினால் மாத்திரம் கொள்வனவு செய்து விநியோகிக்க வேண்டிய பொருள் என்பதனால் இதன் மூலம் தேசிய பாடசாலைகளுக்கு மேலதிகமாக மாகாணப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்றன.

இதன் போது வினைத்திறன் முறைகள் ஊடாக குறைந்தபட்ச எரிபொருள் அளவு மற்றும் குறைந்தபட்ச வாகன அளவினைப் பயன்படுத்தி களஞ்சியத்தில் இருக்கும் காலத்தை முடியுமான அளவு குறைத்து மாணவர்களுக்கு கற்றல் - கற்பித்தல் தேவைகளை நிறைவு செய்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களின் ஊடாக கல்வி முறைமைக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் பொருட்களை வழங்கும் பணிகள் கல்விச் சேவை வழங்கல் கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அழகியல், விளையாட்டு, விவசாயம், தகவல் தொழில்நுட்பம், விசேட கல்வி மற்றும் விஞ்ஞானம் போன்ற பல பாடத்துறைகளில் கற்றல் உபகரணப் பொருட்கள் தேசிய பாடசாலை முறைமைக்கு விநியோகிக்கும் அவ்வப் பாடங்களுக்காக மீள ஒரே இடத்துக்குக் கொண்டு செல்வதற்குப் பதிலாக எரிபொருள் மற்றும் போக்குவரத்து வசதிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் பயன்படுத்தப்படும் விசேட வினைத்திறன் முறை இச்செயற்பாடுகள் ஊடாக மேற்கொள்வது அவசியமாகும். இதேவேளை சிக்கலான பெறுகைச் செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுச் செயற்பாடுகள் பிரயோக ரீதியில் அவ்வப் பாடங்களுக்காக தனித்தனியாக மேற்கொள்ளப்படுகின்றன. எனவே மேற்கூறப்பட்டவாறு குறைந்தபட்ச பெறுகை அளவில் உயர்ந்தபட்சம் போக்குவரத்துக்காகப் பின்பற்றும் விசேட உபாயமாக சகல பாடப் பணிப்பாளர்களினாலும் அறிவிக்கப்படும் பாடசாலைப் பொருட் பட்டியல் மற்றும் பாடசாலை அமைவிடப் பகுப்பாய்வு மேற்கொண்டு பெறப்பட்டுள்ள தொகைகளை விநியோகிப்பதற்காக மாதாந்த விநியோகத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இதற்கமைய இக்கற்கை உதவிப் பொருட்கள் தேசிய பாடசாலைகளுக்காக மற்றும் விசேடமாக விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் சகல பாடசாலைகளுக்காகவும் விநியோகிக்கும் செயற்பாடுகள் வருடாந்த இலக்காக மாதாந்த இலக்குகளின் திரண்ட பெறுமதி பயன்படுத்தப்படுவதுடன் முன்னேற்றமாக அத்திரண்ட இலக்கிற்கு இணைவாக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு 2008 ஆம் ஆண்டில் கல்விச் சேவை வழங்கல் கிளையினால் விநியோகங்கள் வழங்கப்பட்டதுடன் கற்றல் உதவிப் பொருட்கள் மற்றும் அவ்வழங்கல்களைப் பெற்ற பாடசாலையின் அளவு மற்றும் அவ்வாண்டுக்குரிய இலக்குகள் நிவர்த்தி செய்யப்பட்ட முன்னேற்றங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

## 2008 ஆம் ஆண்டுக்காக கற்றல் - கற்பித்தல் உபகரண விநியோக சுருக்க அறிக்கை

| தொ. இல | வருடத்துக்குரிய பிரதான பணிகள் | வருடாந்த இலக்கு | வருட இறுதி முன்னேற்றங்கள் |
|---|---|---|---|
| 1 | அழகியல், மேற்கத்தேய சங்கீத உபகரணங்களை வழங்குதல் | சங்கீத உபகரணங்கள் 3 வகைகள் 30 பாடசாலைகளுக்கிடையே விநியோகிக்கப்பட்டன | 100% |
| | | சங்கீத உபகரணங்கள் 3 வகைகள் 100 பாடசாலைகளுக்கிடையே விநியோகிக்கப்பட்டன | 100% |
| | சங்கீத சித்திர உபகரணம் (சித்திர அறிவித்தல் பலகைகள்,ஈசல், பெனல் பலகைகள்) வழங்குதல் | உபகரணங்கள் 3 வகைகள் 100 பாடசாலைகளுக்கிடையே விநியோகிக்கப்பட்டன | 100% |
| | அழகியல் உபகரணங்களுக்கு மல்டிமீடியா பிரஜெக்டர் வழங்குதல் | பிரஜெக்டர் 30 பாடசாலைகளுக் கிடையே விநியோகிக்கப்பட்டன | 100% |
| | அழகயில் உபகரணங்களை மேற்கத்தேய வாத்தியக்குழு தொகுதிகளை வழங்குதல் | 25 தொகுதிகள் 25 பாடசாலைகளுக்கிடையே விநியோகம் | 100% |
| | | 16 பியானோக்கள் 16 பாடசாலைகளுக்கிடையே விநியோகித்தல் | 100% |
| 2 | விவசாய உபகரணங்களை வழங்குதல் | குளோப் சூழல் கற்கை உபகரண 31 வகைகள் 50 பாடசாலைகளுக் கிடையே விநியோகம் | 100% |
| | | 17 வகையான விவசாய உபகரணங்கள் 50 பாடசாலைகளுக்கிடையே விநியோகம் | 100% |
| | | 11 வகையான விவசாய உபகரணங்கள் 74 பாடசாலைகளுக் கிடையே விநியோகம் | பாடசாலை 34 |
| | | குளோப் சூழல் கற்கை உபகரண 30 வகைகள் 35 பாடசாலைகளுக் கிடையே விநியோகம் | பாடசாலை15 |
| 3 | முறைசாரா மற்றும் விசேட கல்வி நிறுவனங்களுக்கான பொறுப்புக்கள் | விசேட கல்வி விளையாட்டு 17 உபகரணத் தொகுதிகள் 17 பாடசாலைகளுக்கிடையே விநியோகம் | பாடசாலை14 |
| | | விசேட 10 தொலைக்காட்சிகள் 10 பாடசாலைகளுக்கிடையே விநியோகம் | 100% |
| | | 17 பிரெய்ல் அச்சுக்கள் 17 பாடசாலைகளுக்கிடையே விநியோகம் | விசேட பாடசாலை 15 |
| | | பிரெய்ல் இயந்திரம் (மஹரகம பிரெய்ல் அச்சகத்திற்கு) | 100% |
| 4 | விளையாட்டு உபகரணங்களை வழங்குதல் | 20 வகையான பொருட்கள் 326 பாடசாலைகளுக்கிடையே விநியோகம் | 100% |
| 5 | புதிய மாதிரி ஆரம்பப் பாடசாலைகளுக்காக பொருட்களை வழங்குதல் | TV, DVD, OHP இயந்திரம், போட்டோப் பிரதி இயந்திரத் தொகுதிகள் வீதம் (மாகாணப் பாடசாலைகளும் உட்பட) 428 பாடசாலைகளுக்கிடையே விநியோகம் | 100% |
| | | கணினி,UPS, மற்றும் அச்சு இயந்திரத் தொகுதிகள் வீதம் 49 பாடசாலைகளுக்கிடையே விநியோகம் | 100% |
| | | கணினி மேசை, கதிரை, 75 பாடசாலைகளுக்காக 42 மேற்கத்தேய வாத்திய உபகரணத் தொகுதிகள் 42 பாடசாலைகளுக்கிடையே விநியோகிக்கப்பட்டன. | 100% |
| 6 | நவோதய பாடசாலைகளுக்காக பொருட்களை வழங்குதல் | 50 போட்டோப் பிரதி இயந்திரங்கள், 27 டுப்ளோ இயந்திரங்கள், 53 பெக்ஸ் இயந்திரங்கள், 50 ரோணியோ இயந்திரங்கள் | 100% |
| 7 | தேசிய பாடசாலைகளுக்கான பொருட்களை வழங்குதல் | FAX இயந்திரங்கள் 49, போட்டோ பிரதி இயந்திரங்கள் 79, ரோணியோ இயந்திரங்கள் 60 வீதமும் தேசிய பாடசாலைகளுக்கிடையே விநியோகிக்கப்பட்டன | 100% |
| 8 | தேசிய பாடசாலைகளுக்காக பொருட்களை வழங்குதல் | 5 கணினிகள் வீதம் 26 பாடசாலைகளுக்கிடையே விநியோகம் | 100% |
| | | 33 அச்சு இயந்திரங்கள் 33 பாடசாலைகளுக்கிடையே விநியோகம் | 100% |
| 9 | ஆரம்பப் பிரிவு சபை உபகரணங்களை வழங்குதல் | 38 போட்டோப் பிரதி இயந்திரங்கள் | 100% |
| 10 | விஞ்ஞான உபகரணங்களை வழங்குதல் | 99 விஞ்ஞான உபகரண வகைகள் மற்றும் இரசாயனப் பொருள் வகைகள் 88 உம் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகள் 105 இற்கிடையே தேவைக்குஅமைய விநியோகம் | 100% |

# அத்தியாயம் 6 : கல்விச் செலவினம்

## 6.1. மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம்

கல்வி அமைச்சின் 2008 ஆம் ஆண்டின் உண்மையான மீண்டெழும் செலவினம் ரூபா மில்லியன் 19,561 என்பதுடன் ஒதுக்கீடு ரூபா மில்லியன 20,964 ஆகும்.ஒதுக்கீடு மற்றும் செலவினத்திற்கிடையில் ரூபா மில்லியன் 1,403 காணப்படுகிறது.

**அட்டவணை 6.1.1. : மொத்த ஒதுக்கீடு மற்றும் உண்மையான செலவினம் (மீண்டெழும்) - 2008**

| குறியீடு | செயற்றிட்டம் | மொத்த ஒதுக்கீடு | உண்மையான செலவினம் |
|---|---|---|---|
| 1. | ***நிர்வாக வேலைத்திட்டங்கள்*** | | |
| | அமைச்சு அலுவலகம் | 46,450,000 | 43,309,184 |
| | நிர்வாகம் மற்றும் தாபன சேவை | 278,137,000 | 273,193,744 |
| | மொத்தம் | 324,587,000 | 316,502,933 |
| | | | |
| 2. | ***அபிவிருத்திப் பிரிவு*** | | |
| | ஆரம்பப் பிரிவு | 1,890,302,067 | 1,882,009,071 |
| | இடைநிலைப் பிரிவு | 8,632,025,046 | 8,409,762,117 |
| | விசேட கல்வி | 2,286,160,175 | 2,262,887,516 |
| | வழங்கல் மற்றும் உதவி | 6,871,874,712 | 5,836,365,657 |
| | திட்டமிடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 27,390,000 | 19,504,195 |
| | ஆசிரிய பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கோட்பாடு | 918,431,000 | 838,786,721 |
| | பொதுக்கல்வியின் பண்புசார் விருத்திக்கான நிறுவன உதவி | 338,000,000 | 312,669,326 |
| | **மீண்டெழும் மொத்தம் (அபிவிருத்தி)** | **20,964,183,000** | **19,561,984,604** |

*மூலம் : கல்வி அமைச்சு*

**அட்டவணை 6.1.2 : ஒதுக்கீடு மற்றும் உண்மையான செலவினம் (மூலதனம்) - 2008**

| குறியீடு | செயற்றிட்டம் | மொத்த ஒதுக்கீடு | உண்மையான செலவினம் |
|---|---|---|---|
| 1. | ***நிர்வாக வேலைத்திட்டங்கள்*** | | |
| | அமைச்சு அலுவலகம் | 13,828,134 | 12,710,988 |
| | நிர்வாகம் மற்றும் தாபன சேவை | 112,371,866 | 107,836,240 |
| 2. | *அபிவிருத்தி வேலைத்திட்டம்* | | |
| | ஆரம்பக் கல்வி | 520,500,000 | 334,026,237 |
| | இடைநிலைக் கல்வி | 1,155,000,000 | 908,617,116 |
| | விசேட கல்வி | 28,250,000 | 8,039,710 |
| | ஆசிரியர் பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கோட்பாடு | 136,000,000 | 63,798,000 |
| | பொதுக் கல்வியின் பண்புசார் விருத்திக்கான நிறுவன உதவி | 48,000,000 | 29,395,000 |
| | பொதுக் கல்விக்கான அபிவிருத்திச் செயற்றிட்டம் | 3,171,250,000 | 1,973,848,260 |
| | **மூலதன மொத்தம்** | **5,185,200,000** | **3,438,258,551** |
| | **மீண்டெழும் மற்றும் மூலதன மொத்தம்** | **26,149,383,000** | **23,000,243,155** |

*மூலம் : கல்வி அமைச்சு*

இதற்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணை மூலமும் விபரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.1.3. : அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் சுருக்கம் - 2008**

| விபரங்கள் | ஆரம்ப நிலுவை | ஆண்டின் கிடைப்பனவு | ஆண்டின் கடன் | 2011.12.31 ஆந் திகதியன்று நிலுவை |
|---|---|---|---|---|
| உண்மையானது | 2,021,774,732.72 | 612,679,983.22 | 620,447,042.65 | 2,014,007,673.29 |
| பரிந்துரை எல்லை | | 780,000,000.00 | 470,000,000.00 | 2,800,000,000.00 |

*மூலம் : கல்வி அமைச்சு*

## 6.2 கல்விக்கான வெளிநாட்டு உதவி முதலீடுகள்

2008 ஆம் ஆண்டில் நேரடியாகக் கல்வி அமைச்சு ஊடாக மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு உதவி ஊடான வெளிநாட்டு முதலீடு ரூபா 2872.82 மில்லியன் ஆகும். இதற்காகப் பங்களிப்பு வழங்கிய உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, யுனிசெப் நிறுவனம், ஜீ.ரீ.இஸட். நிறுவனம், சேவ் த சில்ரன் நிறுவனம் மற்றும் ஸ்பேஸ் (Space) தனித்தனியாக மேற்கொள்ளப்பட்ட முதலீடு கீழே 6.2.1. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.2.1. வெளிநாட்டு உதவி முதலீடு**

| மூலம் | நிகழ்ச்சித் திட்டங்கள் | வருடாந்த முதலீடு (ரூபா மில்லியன்) |
|---|---|---|
| உலக வங்கி | கல்வித் துறைசார் அபிவிருத்திக் கோட்பாடு மற்றும் வேலைத்திட்டங்கள் | 635 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | இடைநிலைக் கல்வி நவீன மயப்படுத்தும் செயற்றிட்டம் மற்றும் அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டம் | 1499.82 |
| யுனிசெப் | வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்கள் | 398 |
| ஜீ.ரீ.இஸட். | வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்கள் | 38 |
| சேவ் த சில்றன் | வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்கள் | 189 |
| ஸ்பேஸ் | வருடாந்தம் அமுல்படுத்தும் வேலைத்திட்டங்கள் | 113 |
| | மொத்தம் | 2872.82 |

இவ்வுதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்ட பிரதான வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 6.2.1. உலக வங்கி உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்

- போசாக்கு மற்றும் சுகாதார ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் மாணவர் முகாம்களை நடாத்துதல்.
- இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- ஆங்கிலக் கல்விக்கான தொழில்சார் விருத்தி வேலைத்திட்டம்.
- பிரதேச ஆங்கில வள மத்திய நிலையங்களுக்காக உபகரணங்களை வழங்குதல்.
- தகவல் தொடர்புசாதனத் தொழில்நுட்ப பாடத்துக்குரிய பயிற்சி மற்றும் கொள்ளளவு விருத்தி.
- முறைசாராக் கல்வி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தி தொழிலாளர்களின் கொள்ளளவினை விருத்தி செய்தல்.
- இரட்டை மொழியல்லாத ஆசிரியர்களை இரட்டைமொழி ஆசிரியர்களாகப் பயிற்சியளித்தல்.
- பயிற்றப்படாத பட்டதாரிகளுக்குப் பயிற்சியளித்தல்.
- கல்வித் தரம் மற்றும் பண்புசார் விருத்தி தொடர்பாக அதிபர்களை அறிவுறுத்தல்.
- பாடசாலை வெளி மதிப்பீடு தொடர்பாக உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- பாடசாலை நூலகப் பயன்பாடு தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள், நூலகப் பொறுப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- பாடசாலைப் பௌதீக வசதிகள் தொடர்பான மேற்பார்வை.
- கணித ஆசிரியர்களின் கேத்திர கணித அறிவு விருத்திக்கான வேலைத்திட்டம்.
- க.பொ.த. (உ.த.) பாடப் பரிந்துரையின் பிரச்சினைகளை இனங்காண்பதற்கான வேலைத்திட்டங்கள்.
- பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணம் மற்றும் இரசாயனப் பொருட்களை வழங்குதல்.
- தேசிய விஞ்ஞானக் கல்வி ஐந்தாண்டுத் திட்டமிடலைத் தயாரித்தல்.
- ஆரம்பப் பாடசாலைகளுக்கு பல்தேர்வுக் கற்பித்தல் முறைகளை அறிமுகப்படுத்தல்.
- தோட்டப் பாடசாலை முன்னேற்றங்கள்.

### 6.2.2. ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி பெறும் அறிவுசார் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் பணிகள்

- 814 இடைநிலைப் பாடசாலைகளுக்காக ரூபா 6.40 மில்லியன் பாடசாலை நிதி வளங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.
- 372 கணினிக் கற்கை நிலையங்களுக்காக கணினி மற்றும் உதிரிப் பாகங்களை வழங்குதல்.
- 99 பாடசாலைக்காக உயர்கல்வி மற்றும் சாதாரண தர விஞ்ஞான ஆய்வுகூடங்களைத் தாபித்தல் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணம்
- 107 பாடசாலைகளுக்காக பல்லூடகப் பிரிவுகளைத் தாபித்தல்.
- 690 பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் பணிகளை மேற்கொள்ளல்.
- 81 பாடசாலைகளில் செயற்பாட்டு அறை, நூலகம் மற்றும் விவசாய மத்திய நிலையங்களைத் தாபித்தல்.
- 943 பாடசாலைகளுக்கு கணினி மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்பத் துறைக்குரியதாக 9000 ஆசிரியர்களுக்காக ICDL/CAL ஆசிரிய பயிற்சி புலமைப்பரிசில்களை வழங்குதல்.
- e-citizen பயிற்சிப் பாடநெறி உத்தியோகத்தர்கள் மற்றும் 490 அதிபர்களுக்காக வழங்குதல்.
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்காக சிசுதிரிய 15,000 புலமைப்பரிசில்களை வழங்குதல்.
- குறுகியகால ஆசிரிய பயிற்சிப் புலமைப்பரிசில் - Short ICT Courses (5 நாட்கள்) 810 வழங்குதல்.
- ஈ - கிராமச் செயற்றிட்டத்தின் கீழ் 30 பாடசாலைகளில் ஈ-கிராமங்களைத் தாபித்தல்.
- மாகாணக் கல்வி மென்பொருள் ஆக்கப் போட்டித் தொடருக்காக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆக்கமும் மென்பொருட்கள் 36,314 இனைநச் சமர்ப்பித்தல்.